மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

ர் 5 | 1—3—57 | இதழ் 21

முறையிது கேட்பீர்!

(அருணன்)

★

நாட்டவரே! நல்ல நாட்டவரே!
நலந்தரும் முறையிது கேட்பீரே!

ஞ்சத்தைப் போக்குவம் என்றே உரைத்தார்
-ஆனால்
லஞ்சத்தையே மிகப்பல வாக வளர்த்தார்
அஞ்சாண்டுத் திட்டத்தால் நலமுண்டென்றார்
அதில்நலம் நமக்கில்லை என்பதறிவீர்
(நாட்டவரே)

ட்டினைக் கேட்பதற்கே உயர்வி மானத்தில்
ய்யார மாகவந்தார் பஞ்சசீலப்பண்டிதர்
ாட்டின் நலத்திலிவர் நாட்டமுண்டென்றால்
—அழகுதால்
ட்ட பொழுதிலவர் எங்கேயிருந்தார்
(நாட்டவரே)

பிணமலை மீதிருந்து ஆட்சிபுரிந்தோர் இன்று
பணமலை தனைக்காட்டி ஓட்டுக்கேட்கிறார்
காங்கிரசுத் திட்டங்கள் பலபல என்று
—கூறியே
பாங்கரான முதலைக்கிங்கு வாழ்வு கேட்கிறார்
(நாட்டவரே)

ஆளுங்கட்சிக் கொடுமையெல்லாம் அகன்று
—போக
ஆட்சியிலே ஜனநாயகம் என்றும் மலர
நாளும் உங்கள் நலங்கருதும் தி. மு. க. வை
ஆதரித்து ஓட்டுத்தந்து உயர்வுகொள்வீர்
(நாட்டவரே)

ள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

தென்னாட்டின்மீது வடநாட்டின் ஆதிக்கம்!

"சின்ன விஷயங்களுக்கும்கூட டில்லி மந்திரிகள் 'சம்மன்' செய்யப்படுகிறார்கள். இது கௌரவமானதாக எனக்குப்படவில்லை—சென்னை மந்திரிகள் உரிய அந்தஸ்துடன் நடத்தப்படுகிறார்கள் என்று எண்ணக்கூடியதாயில்லை."

—டாக்டர் ஏ. லட்சுமணசாமி: 3-3-56ல், சென்னை மேல் (சட்ட)சபையில்.

"இந்தியப் பேரரசிடம் மிதமிஞ்சிய அதிகாரங்கள் குவிந்துகிடக்கின்றன." "தங்களுடைய பணத் தேவைக்காக, மாகாண சர்க்கார்கள் இந்தியப் பேரரசிடமே தொங்கிக்கிடக்க வேண்டியுள்ளது. இது, கடன்காரன் ஒருவன் கடன் கொடுப்பவரின் தலைவாயிற்படியில் துவண்டு காத்துக்கிடப்பதுபோல் இருக்கிறது." "......எனவே, இந்தியப் பேரரசிடம் குவிந்துகிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும்."

—31-3-56ல், மைசூர் சட்டசபையில் முதன் மந்திரி அனுமந்தையா.

"நாளுக்கு நாள் மத்திய சர்க்காரின் அதிகாரம் குவிந்துகொண்டே போகிறது." "......பணக்குவியலைவிட அதிகாரக் குவியல் இன்னும் ஆபத்தானது." "பெரும்பாலான விவகாரங்களில், ராஜ்ய சர்க்கார் டில்லிக்கு ஒரு தபால் பெட்டியாகக் காட்சியளிக்கிறது." "சிறிது விளக்கமாகச் சொல்லப்போனால், ராஜ்ய சர்க்காரின்கீழ் முனிசிபாலிடி எப்படி இருந்து வருகிறதோ அதே போன்றுதான், மத்திய சர்க்காரின்கீழ் ராஜ்ய சர்க்காரும் இருந்து வருகிறது."

—'நவ இந்தியா' 28-5-56ல் ஆசிரியர் பி. ஆர். இராமகிருஷ்ணன் (காங்கிரஸ்)

"மானியம் வாங்குபவர்களாக டில்லி சர்க்கார் இருப்பதால், அவர்கள் மாநில சர்க்காரின் விவகாரங்களில் அளவுக்கு மீறித் தலையிடுகிறார்கள். "......நமக்குள்ள சிக்கலான பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடுவதற்காக, நாம் உச்சமான அதிகார பீடத்தில் அமர்ந்திருப்பவர்களோடு மோதிக்கொள்ளும் காலம் வரத்தான் போகிறது."

—முன்னாள் முதன் மந்திரி; கவர்னர் குமாரசாமி இராஜா: கோவையில் 29-8-56.

"மத்திய சர்க்கார் சபைகளில் தென்னாட்டு மக்களுடைய வலுவை உணர்த்த அவர்கள் தங்களிடையேயுள்ள மொழி வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டாகவேண்டும். இந்த ஒற்றுமை ஏற்பட்டாலன்றி தென்னாடு, வடநாட்டிற்கெதிராகத் தன்னைக் காப்பாற்றிக் கொள்வது முடியாமற்போய்விடும்."

—ஆந்திர மந்திரி பி. கோபால் ரெட்டியார் 31-1-57.

இவர்கள் எல்லாம் இப்படிக் கூறியிருப்பது தெளிவாக்கவில்லையா?

வாக்காளர்களே! கூறுங்கள்!

தன் தாயகம் எது? தேசம் எது?—என்பதை அறிந்தும் அறியாதவராய் போலித் தேசியம் பேசும் ஏகாதிபத்திய தாசர்களான

'ஏக இந்தியாக்'களுக்கா உங்கள் 'ஓட்டு?'

நாட்டை மீட்க—விடுதலை பெறப் போராடும்

தி. மு. க. அபேட்சகர்களுக்கே

உங்கள் 'ஓட்டு' தாருங்கள்

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

மலர் 5 ★ (1—3—57) ★ இதழ் 21

வாகைசூடி வாரீர்!

செங்கதிர் பரப்பி, இருள் நீக்கி, வாட்டும் குளிர்போக்கி, எழுச்சியின் பரவல் எங்கணும் நிலவ, உயிரினங்கள் செழிக்க, மாந்தர்கள் மகிழ உதயசூரியன் எழுந்துவிட்டது-நாட்டில் ஒரு புதிய கட்டம் தொடங்கிவிட்டது.

தி. மு. க., அரசியலிலே மலர்ச்சியையும் எழுச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது. அந்த மலர்ச்சிக்கு அமைப்புத் தரும் நாள், மார்ச். 1, 4, 6, 8, 11, ஆகிய ஐந்து நாட்கள். இந்த ஐந்து நாட்களில், தமிழ்நாடு தேர்தல் விழாக் கோலம் கொள்கிறது. அதன் பொருள் அடுத்த ஐந்தாண்டு ஆட்சியின் தன்மையை நிர்ணயிக்கிறது என்பதுதான்.

எங்கணும், தேர்தல் எப்படியிருக்கும்-யார்கை ஓங்கும்-எவரெவர் வெற்றிபெறுவர் என்ற கேள்வி, நாட்டுமக்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் வந்து கொண்டிருக்கிறது. அவர்கள் தேர்தல் முடிவை எதிர் நோக்கிய வண்ணம் இருக்கின்றனர். தம் கடமைகள்யாது என்பதை முழுதுணர்ந்த தி. மு. கழகத் தோழர்கள் இரவு பகலென்னாது ஊணுறக்கமின்றி ஓயாது உழைத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களெல்லோரும் இனித்தான்-கடைசி நேரத்தில்தான் மிக கண்ணும் கருத்துமாகச் செய்யவேண்டிய வேலைகள் கணக்கற்ற அளவில் காத்திருக்கின்றன. இந்த வேளைகளில் தொல்லைகள் அதிகம் நேரலாம், எதிர்பாராத இடையூறுகள் குறுக்கிடலாம், பல இன்னல்களும் வலுவில்கூடப்புகுத்தப்படலாம். ஆனல் அவற்றைப் பொருட்படுத்தாது நம் கடமையையும், நாம் கைக்கொண்டுள்ள பணியின் முதன்மையையும் எண்ணியே செயலாற்றி வரவேண்டும்.

முறைகளின்செயல் தன்மைகள் எவருக்கும் எந்த விதத் தொல்லையும் தந்து விடாமலும், வாக்காளர்களிடம் நமது குறிக்கோளின் தன்மைகளை, அவர்கள் உள்ளங் கொள்ளுமாறு எடுத்தியம்பி விளக்கம் தந்தும் ஓட்டுப்பெறும் அளவில் இருக்கவேண்டும். இதுபோன்ற வகைகளில் நமக்கு ஆதரவு தேடிக்கொள்வதே பேராதரவாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் நம்மை உணர்ச்சி வயப்படும்படியான செயல் முறைகள், வதந்திகள், எதிர்ப்புகள் பலவாக வரக்கூடும். இந்தச்சயம்தான் நம்மவர்கள் பெற்றுள்ள ஆற்றல்களுக்கு ஒருதேர்வுபோல் வந்தமையும். எனவே தன்னடக்கமும், பொறுமையும், கடமைஎண்ணமும், பிறர்கோபம் ஆற்றும் முறைமையும் கைக்கொண்டு செயலாற்ற வேண்டும். அதன் விளைவு தேர்தல்நாளன்றே நாம் காணநேரிடும். நமது பணிமுறைகளின் நிறைவுப் பயன் தேர்தல் நாளன்று வாக்காளர்களின் உள்ளத்தில் உண்மையான எண்ணத்தை ஏற்படுத்தி, காலையில் எழுந்ததும் சிங்காரித்துக் கொண்டவண்ணம் ஓட்டுச்சாவடிக்கு வந்து தி. மு. க. வுக்குத் தங்கள் ஓட்டுகளைத் தந்துதான் பிறகாரியங்களில் ஈடுபட வேணடுமென்ற அளவுக்கு அவர்களை ஊக்குவிப்பதாக இருக்கவேண்டும்.

தேர்தல்முடிவைப் பற்றிய கவலையல்ல நமக்கு முதன்மையானது! வெற்றியோ-தோல்வியோ என்ற கவலைக்கு இடமில்லை நம்மிடம்; நமது நோக்கமும் அதுவல்ல. அன்று சென்னை மாநில மாநாட்டில் "ஐக்கிய நாடுகள் மன்றத்தில் திராவிடநாடு பிரச்சினை பேசப்படும்" என்று அண்ணு அவர்கள் கூறியது இன்னமும் நம் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. திருச்சிமாநாட்டின் சூளுரைகள் நம்நினைவைவிட்டு அகலமுடியாது. நம் முயற்சியும், பணியும் டில்லியின் ஆட்சி பீடத்தை அசைக்கட்டும்.

நம்முடையவெற்றி பொது மக்களின் செயலில் அடங்கியிருக்கிறது! அவர்களைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

"பொது மக்களே! நலம் பலவும் வர! வளம் நிலவ! தி. மு. கவுக்கு ஆதரவுதாரீர்-பணிபுரிய வருகிறோம் ஓட்டுத்தாரீர்" என்று.

கழகத் தோழர்களே! பணிபுரிவீர்களாக உங்கள் உழைப்பு கழக அபேட்சகர்களுக்கும் ஆதர்வாளர்களுக்கும் வெற்றியைத் தேடித் தரட்டும்.

தி. மு. கழக அபேட்சகர்களே! ஆதரவாளர்களே! வெற்றிகொண்டு வாரீர்! வாரீர்! வாரீர்! என வரவேற்கிறோம் வாழ்த்துகிறோம்! வாகை சூடி வாரீர்!

தி. மு. க. ஜனநாயக எதிர்க்கட்சி

எதிர்பாராதவாறு அந்த நண்பர் வந்துசேர்ந்தார். அவர் திராவிடக் கழகத்தில் ஒரு முக்கி ஈஸ்தர். எதையும் ஒளிவு மறைவின்றி பேசுபவர். அவரிடத்தில் எனக்கு நல்ல மதிப்புண்டு. ஏனென்றால் பொதுவாழ்விற்காக தனது சுகபோகங்களைப் பெரிதெனக் கருதாமல் சேவை செய்பவர் என்ற காரணத்தால். எனவே அவரும், நானும் அன்று மனம்விட்டுப் பேசினோம்.

திராவிட கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அடிப்படையான கொள்கை வேற்றுமை உண்டா? என்று வினவினேன். இல்லை என்று ஒப்புக் கொண்டார்.

பிறகு, தேர்தலில் கண்ணீர்த் துளிகளை திராவிட கழகத்தாரும். அய்யாவும் (பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை இப்படித்தான் அநேகர் அன்பாகக் குறிப்பிடுகின்றனர்) எதிர்க்கக் காரணமென்னவென்று கேட்டேன்.

அது சொந்தக் காரணத்தை முன்னிட்டேயன்றி கொள்கை வேறுபாட்டினால் அல்ல என்று பதிலளித்தார்.

அப்படியானால் நீங்கள் தி. மு. க. ஆதரவாளரா? இது அந்த தி. க. நண்பரின் கேள்வி.

எதைக் கண்டு அப்படிக் கேட்கிறீர்கள் என்றேன்.

உங்கள் எழுத்துக்களில் தி. மு. க. வாசனை வீசுவதுபோலத் தெரிகிறது. அதனால்தான் என்று விளக்கம் தந்தார் நண்பர்.

நான் எந்தக் கட்சியையும் ஆதரிக்கவில்லை. ஜனநாயக வளர்ச்சியை விரும்புகிறேன். அதனால்தான், இந்தத் தேர்தலில் தி. மு. க. வும் எதிர்க் கட்சி என்ற முறையில் ஜெயிக்க வேண்டுமென்று கூறுகிறேன். இதைத்தவிர வேறு எவ்விதக் காரணமும் இல்லை என்று தெரிவித்தேன்.

இன்று அதிகாரத்திலுள்ள கட்சி காங்கிரஸ் என்பதும், தேர்தலில் காங்கிரசும், காங்கிரசிலிருந்து வெளியேறியவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியும், பிரஜாசோஷலிஸ்டுகட்சியும், சோஷலிஸ்டுக்கட்சியும், மிராசுதார்கள் கட்சியும், தி. மு. கழகமும் போட்டியிடுவது எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

இத்தனை கட்சிகளில் மற்றக் கட்சிகளை ஆதரிக்காமல் தி. மு. க.வுக்கு நான் ஆதரவு அளிப்பதாக என்னுடைய தி. க. நண்பர் கூறுவதல் ஓரளவு உண்மை இருக்கிறது. அதற்கு காரணமென்ன என்பதை உங்களுக்கு கூறிவிடுகிறேன்.

நான் ஏற்கனவே பல தடவைகளில் எழுதியிருப்பதைப் போல இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியே மெஜாரிட்டிக் கட்சியாக வரப் போகிறது என்பதைப் பற்றி எனக்குச் சந்தேகம் கிடையாது.

அப்படி வைத்துக்கொண்டு பார்க்கும்போது ஜனநாயக முறைப்படி அதற்கு ஒரு பலமான எதிர்க்கட்சி இருக்கவேண்டியது இன்றியமையாததாகும். அத்தகைய கட்சி ஒன்று உருவாவதற்கு உதவி செய்யவேண்டியது ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் கடமை. இதில் இரண்டு வித அபிப்பிராயத்திற்கு இடமில்லை.

ஆனால் இன்று தமிழ்நாட்டில் ஒரு நல்ல எதிர்க்கட்சியாக விளங்குவதற்கான சாத்தியக் கூறுகளைப் பெற்றிருக்கும் கட்சி எது?

கம்யூனிஸ்டு அதற்குத் தகுதியில்லை. மக்களிடையே ஆதரவும் இல்லை. பொதுத் தேர்தலில் 50 ஸ்தானங்களுக்குக்கூட போட்டியிட முடியாத நிலைக்கு அக்கட்சி தேய்ந்துவிட்டது. பண்டித நேரு சமீபத்தில் சென்னையில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் குறிப்பிட்டது போல், நாட்டின் உண்மையான நிலவரத்தைக் கவனியாமல் நாட்டு மக்களின் பண்புகளுக்கு முரணான ஒரு அந்நிய சித்தாந்தத்தில் நம்பிக்கைகொண்டு, தமிழர் மரபுக்குப் புறம்பான நடைமுறைகளைப் பின்பற்றும் நோக்கமுடையது. பார்லிமெண்டரி ஜனநாயக தத்துவத்தைவிட பலாத்காரமே பயன்தரும் என்று எண்ணிக் கொண்டிருப்பது—இன்று பலாத்கார முறைகளைப் பின்பற்றுவிடினும் பலாத்காரக் கொள்கையை அது பகிரங்கமாகக் கண்டிக்கவும் இல்லை. எதிர்காலத்தில் அவசியம் ஏற்பட்டால் அதைப் பின்பற்றுதென்பதற்கு எவ்வித உத்திரவாதமும் கிடையாது.

இவ்வித முகாந்திரங்களினால் கம்யூனிஸ்டு கட்சி அபேட்சகர்களை ஆதரியுங்கள் என்று நான் சொல்லுவதற்கில்லை.

அடுத்தபடியாக நேருவுக்கு எதிர்க் கட்சிகளில் மிகவும் நெருக்கமானதென்று சொல்லப்படும் பிரஜா—சோஷலிஸ்டு கட்சியோ மக்களி

டம் நெருக்கமானதாக இருக்கவில்லை. பிரஜா சோஷலிஸ்டுகளுக்கு கொள்கைத்தெளிவில்லை; சரியான தலைமைத்துவம் இல்லை என்று நான் சொல்லவில்லை. நேருவே சொல்கிறார்! சென்னை சட்டசபையின் 205 இடங்களில் 20 இடங்களுக்கு ஆட்களை நிறுத்தி, அவர்களில் 10 பேர்கள் வெற்றி பெற்றாலே பெரியகாரியம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் அந்தக் கட்சி ஆளும் கட்சியை நேரடியான வழியில் செலுத்த முடியாது. மேலும் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் பிராஜா—சோஷலிஸ்டு கட்சியில் அங்கத்தினர்களைவிட 'தலைவர்கள்' தான் அதிகம். அந்தத் தலைவர்களையும் உள்ளூர்காரர்களுக்கே தெரியுமா என்பது சந்தேகம்.

சோஷலிஸ்டு கட்சியின் விஷயமென்ன? இது போன வருஷம் பிரஜா—சோஷலிஸ்டு கட்சியில் அடித்தபுயலில் சிதறி, பிறகு பெய்த தூற்றலில் முளைத்த கட்சி. ஆழமாக பூமியில் வேரூன்ற வாய்ப்புமில்லை—அதிலிருப்பவர்களுக்கு அக்கறையுமில்லை. இக்கட்சியின் அங்கத்தினர்கள் முந்தாநாள் காங்கிரசில், நேற்று பிரஜா சோஷலிஸ்டு கட்சியில் இருந்தவர்கள். இன்று சோஷலிஸ்டு கட்சியில் இருக்கிறார்கள் நாளைக்கு எந்தக் கட்சியில் இருப்பார்களோ தெரியவராது.

முத்துராமலிங்க தேவரின் பார்வர்டு பிளாக்கை அரசியல் கட்சிகளில் ஒன்றாகவே நான் மதிக்கவில்லை என்பதை வாசகர்கள் ஆரம்பத்திலேயே கவனித்திருக்கலாம்.

இந்தக் கட்சியின் தனிப்பெருந் தலைவர், அங்கத்தினர்கள் எல்லாமே முத்துராமலிங்க தேவர்தான். நேதாஜி சுபாஷ்சந்திரபோசுக்கு நாட்டிலிருந்துவரும் நல்லபெயருக்குக்களங்கம் உண்டாக்கிக் கொண்டிருப்பதைத்தவிர இவருக்கு வேறுவேலை கிடையாது. இவரைப்போன்றவர்கள் அரசியலில் இன்னும் நடமாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து, தமிழ் மக்களின் அரசியல் விவேகத்தை மற்றவர்கள் மதிப்பிடுவதாயின், 'முத்துராமலிங்கத்தைத் தலைவராக ஏற்றுக் கொள்பவர்களுக்கும், அரசியல் ஞானத்திற்கும் சம்பந்தமிருக்க முடியாது' என்று தான் நினைப்பார்கள் என்பது என்னுடைய திடமான அபிப்பிராயம்.

இதைத்தவிர, தேர்தலை முன்னிட்டு முளைத்துள்ள மற்றொரு புதிய கட்சி மிராசுதார்கள் கட்சி. இந்த மிராசுதார்கள் கட்சிக்கும் காங்கிரசை விட்டு வெளியேறியுள்ள காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டிக்காரர்களுக்கும் அதிக வித்தியாசம் இருப்பதாய் நான் நினைக்கவில்லை.

இது வரையில் காங்கிரஸ் பேரைச் சொல்லிக்கொண்டும், காங்கிரசை ஆதரித்துக் கொண்டுமிருந்த இந்த இரண்டு கோஷ்டியாரும், தங்கள் சுயநலத்திற்கு ஆபத்து வந்துவிட்டதென்ற எண்ணத்தால் அதற்குக் காரணம் காங்கிரஸின் தற்போதைய தலைமைத்துவந்தான் என்ற நினைப்பினால் காங்கிரசை எதிர்க்க முன்வந்துள்ளவர்களேயன்றி, கட்சி ரீதியில் கொள்கை பலத்தில் உருவான சரியான அரசியல் கட்சிகள் அல்ல.

ஆளும் கட்சிக்குப் போட்டியாக ஒரு நல்ல எதிர்க்கட்சியை நாட்டில் உருவாக்கவேண்டும் என்ற நோக்கம் இவர்களுக்குக் கொஞ்சமும் இல்லை என்று சொல்வதில் மிகையொன்றுமில்லை.

இந்த நிலையில் தி. மு. கழகம் ஒன்றுதான் காங்கிரஸ் கட்சிக்கு எதிர்க்கட்சியாக இருக்கும் நிலையில் உள்ளது என்பதை மறுக்கமுடியாது.

திராவிட முன்னேற்றக்கழகம் தேர்தலுக்காகத் தொடங்கப்பட்ட கட்சியல்ல.

அதிகாரத்திலிருக்கும் காங்கிரஸ் கட்சியானது தமிழர் நலன்களைப் பாதுகாக்கத் தவறியதால், இந்தியர் என்ற பெயரால் வடநாட்டவர் தென்னாட்டவர்மீது ஆதிக்கம் செலுத்தி வருவதால், தமிழகத்தை வெறும் விவசாயப் பண்ணையாக இருக்கவிட்டு வடநாட்டிலேயே எல்லாப் பெரிய தொழிற்சாலைகளையும் நிறுவுவதற்கு அனுமதிக்கப்பட்டதால் — இலங்கையிலும், ஏனைய வெளிநாடுகளிலும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டும் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய சர்க்கார் மனப்பூர்வமாக முன்வராததால்-உள்நாட்டிலும் அவர்களுக்கேற்பட்டுள்ள இன்னல்களைக்கண்டு அவற்றைக் களையாமல் பாராமுகமாக இருந்ததால்—தமிழ் நாட்டில் தமிழர்கள் நலனைப் பேணும் அரசு ஏற்பட்டால் தான் இவற்றிற்கெல்லாம் பரிகாரம் காணமுடியுமென்று கண்டு, திராவிட நாட்டைத் தனியாகப் பிரிக்கவேண்டுமென்ற திட்டத்தை நாட்டு மக்கள் முன் சமர்ப்பித்து, அவர்களின் அங்கீகாரத்துடன் கடந்த பல ஆண்டுகளாகச் செயலாற்றி வருவது திராவிடக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும். இவ்விரண்டில் தேர்தலில் போட்டியிடுவது தி. மு. க.தான். திராவிடக் கழகமும் போட்டியிட்டால் அதுவும் எதிர்க்கட்சி என்று கூறப்படும். இக் கொள்

கையை திராவிடத்திலுள்ள எல்லா மக்களும் ஏற்றுக்கொள்வதாக நான் சொல்லமாட்டேன்.

காங்கிரஸ் ஆட்சியினால் எல்லாச் சலுகைகளையும் அனுபவித்துக்கொண்டிருக்கும் மலையாளிகள், காங்கிரஸ் மத்திய சர்க்காரை எதிர்த்துப் போராடி, தங்களுக்குவேண்டிய உரிமைகளைப் பெறுவதில் வெற்றிகண்ட ஆந்திரர்கள் கன்னடியர்கள் தி. மு. க.வின் லட்சியத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. காங்கிரஸ் ஆட்சியில் தான் தங்கள் நலன்களைப் பெருக்கிக்கொள்ள அதிக வாய்ப்பிருக்கிறதென்று கண்டு கொண்ட ஆலை முதலாளிகள், தொழிலதிபர்கள், பண மூட்டைகள் ஆகியோரும் அதை விரும்பவில்லை. இந்த உண்மையைமறைத்துப் பயனில்லை.

ஆனால், அன்றாடம் உழைத்தும் அரை வயிற்றுக்கு உணவு கிடைக்காமல் அவதிப் படும் பாட்டாளிகள், நெசவாளிகள், உழவர்கள், இன்னும் பிற்பட்ட நிலையிலிருக்கும் தொழிலாளர்கள், ஏராளமான பணத்தைச் செலவிட்டுப் படித்தும், இந்தி தெரியாததால் வேலைக்குச் செல்ல முடியாமல் திண்டாடும் மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சியத்தை ஆதரிக்கிறார்கள். வடவர் ஆதிக்கத்திலிருந்து தென்னாடு-திராவிடம் பிரிந்தால் தான் தாங்கள் மனிதர்களாக, சுயமரியாதையுடன் வாழ முடியு மென்று நம்புகின்றனர்.

அதன் விளைவாகத்தான், திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடவேண்டும் என்று திருச்சி மகாநாட்டின் போது மக்கள் தீர்ப்புக் கூறினார்கள்; அதற்கிணங்கத்தான் இன்று திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் 150 அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது.

சுருங்கச் சொன்னால் இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்தபோது, காங்கிரஸ்கட்சி எவ்வாறு ஒரு விடுதலை இயக்கமாக விளங்கியதோ, அதேபோல இப்போது நடக்கும் வடநாட்டாரின் ஆட்சியில் திராவிட கழகமும் திராவிட முன்னேற்றக்கழகமும் தமிழ்மக்களின் விடுதலை இயக்கமாக இயங்கி வருகிறது. 10 வருட வடவர் ஆட்சியில் தங்களுக்கு எவ்விதநன்மையும் இல்லை என்பதைக் கண்டு மனமிடிந்து நிற்கும் பாமர மக்களின் அபிலாஷைகளை, நம்பிக்கையை பிரதிபலிக்கும் கட்சியாக தேர்தலில் தி. மு. க. பரிணமித்துள்ளது.

தமிழ் மக்களின் நலனில் அக்கறைகொண்ட தலைவர்கள் அதை ஆதரிக்கக் கடமைப்பட்டவர்கள். வாக்காளர்கள் தி. மு. க. அபேட்சகர்களுக்கு வோட்டுப்போட வேண்டியவர்கள்.

ஆனால் இன்று நாட்டில் அதற்கு முற்றிலும் மாறான ஒரு சூழ்நிலையைக் காண்கிறோம். ஜனநாயகக் கொள்கைக்குப் புறம்பான நடைமுறைகளைப் பார்க்கிறோம்.

அதிகாரத்திலிருக்கும் காங்கிரஸ் கட்சிக்கு சரியான எதிர்க்கட்சி இல்லை. தேர்தலில் அது தோல்வியுற்றால் அந்தக்கட்சிக்குப் பதிலாக நிர்வாகத்தை ஏற்று நடத்த தி. மு. க. வைத் தவிர வேறு கட்சி நாட்டில் இல்லை. இந்த நிலையில் தி. மு. க. வை எதிர்ப்பது ஒரு கட்சியின் யதேச்சாதிகாரத்திலேயே கொண்டுபோய் விடுவதற்கு உதவி செய்வதாகும்.

பொதுத்தேர்தலுக்கு 40, 50 அபேட்சகர்களை நிறுத்த முடியாத கட்சிகள் மாற்று சர்க்காரை அமைத்து நிர்வாகம் குலைந்து போகாமல் பார்த்துக்கொள்ளும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது.

அப்படியிருந்தும் தி. மு. கழகத்தை ஒரு நல்ல எதிர்க் கட்சியாக உருவாக்குவதற்கு உதவிசெய்ய வேண்டியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்கும் விந்தையான காரியத்தை தமிழ் நாட்டில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

காமராசர் நல்லவர் என்பதற்காக காங்கிரஸ் கட்சி ஜெயிக்க வேண்டும் என்றும், கண்ணீர்த் துளிகள் ஜெயிக்கக் கூடாது என்றும் தி. க. வின் முழு முதல் நோக்கமாக இருக்கிறது.

இதைப் போலவே காங்கிரஸ் கொள்கைகளையும், வேலைத்திட்டங்களையும் எதிர்க்கும் மற்றக் கட்சிகள்கூட காங்கிரஸை எதிர்த்துப் பிரசாரம் செய்வதைவிட தி. மு. கழகத்தை எதிர்ப்பதையே பிரதான வேலையாக மேற்கொண்டிருக்கின்றன.

அந்தப் போக்கில் தமிழ் நாட்டில் இன்று தேர்தல் பிரச்சாரம் நடந்து கொண்டிருக்கிறது.

[சென்னைக் கடிதம். எழுதுவது: ரே. ஸ்ரீநிவாசன் (தமிழ்முரசு) 10-2-57.]

★

அறிஞர் லூதர் பர்பாங்க்

[தூயமணி]

"மதப்பற்று கொள்ளவேண்டும். படைத்தவனிடம் பேரன்பு காட்ட வேண்டும்"

"கூடாது!"

"ஏனென்றால் கடவுள் எல்லாம் வல்லவர்."

"ஒப்புக் கொள்ள முடியாது"

"விவலிய நூல் கூறுகின்றது. அது கடவுள் வாக்கு."

"இல்லை. தவறு!

"அப்படியானால் இயற்கையின் அமைப்பிலும் தன்மையிலும் மாற்றம் உண்டாக்க முடியுமா? முடியாதே"

"முடியும்; முயன்றால் முடியாததொன்றில்லை."

"நம்பினால் மோக்ஷம் அடைவாய்."

"வேண்டாம்!"

"இல்லையானால் பாழ் நரகஞ் சென்றடைவாய்."

"பயமில்லை!"

இவைகளை யார்? எங்கே? எப்போது? ஏன் கூறினார்? என்று உடனே கேட்கத் தோன்றும். கூறி விடுகின்றேன். இக்கருத்துக்களைக் கொண்டவர் ஒரு அமெரிக்க நாட்டு அறிஞர், செடிகொடிகளின சித்தர், அறிவுதாரி. வீர 'அஞ்ஞானி' லூதர்பர்பாங்க் ஆவார். முதியோரை எதிர்த்துப் பதில் கூறிய பின்னரும் உயிர் வாழ்ந்தாராவென்றால் — வாழ்ந்தார்; முக்கால் நூற்றாண்டுக்குமேல் வாழ்ந்தார். இருபதாவது நூற்றாண்டின் முற்பாதியிலும் முற்பாதி நூற்றாண்டுவரை வாழ்ந்தார். அறிவு ஒளிவிட ஆரம்பிக்கும் போதெல்லாம் மதவாதிகளின் சுயநலம், எதிர்ப்பு, கண்டனம், கேலி, சூழ்ச்சி இவைகளும் கூடவே தோன்றும். இது அமெரிக்க நாட்டில் மட்டுமல்ல, எந்த நாட்டிற்கும் ஒரு பொது விதி போன்றது. அந்தந்த நாட்டு வரலாறுகளும் இதற்குச் சான்று பகரும். பர்பாங்க் தாம் கூறிவந்தவைகளைச் செயலிலேயும் நிரூபித்து வந்தார். எனவேதான் மத ஓநாய்கள் அவர் மீது பாய்ந்ததோடு — வசைமாரி பொழிந்ததோடு — ஒன்றைப் பலவாகத் திரித்தும் புனைந்தும் கூறியதோடுமட்டுமல்லாமல் அவர் கண்ட உண்மைகளை மறைக்க முயன்றும் தோல்வியடைந்தன.

லூதர் பர்பாங்க் 1849-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 7-ம் நாள் அமெரிக்காவில் லங்காஸ்டர் என்ற நகரில் ஒரு ஆங்கிலேய தந்தைக்கும் ஸ்காட்ச் அம்மைக்கும் மகனாகப் பிறந்தார். அவர் தாம் பிற்காலத்தில் தாவர இனத்திற்கோர் தத்துவாசிரியராக வருவதற்கேற்ற இயல்புகள் குழவிப் பருவத்திலேயே அமைந்திருந்தது என்று கூறப்படுகின்றது. அவர் அழகிய மலர்களை வைத்துக்கொண்டு விளையாடுவார். அவர் அழுகையை நிறுத்த மெல்லிய மலரொன்றே சாலும். ஒருமுறை தம் கையிலிருந்த மலரின் இதழொன்று உதிர்ந்திட அதை அவர் பன்முறையும் பொருத்திப் பார்த்தும் பொருந்தாமையால் அழ ஆரம்பித்துவிட்டார். இது அவர் தம் குழவிப்பருவ நிகழ்ச்சிகளிலொன்று. அவர் சிறு பிள்ளையானபோதுங்கூட தம் வீட்டிற்கருகாமையிலிருந்த குன்றிற்குச் சென்று அங்கிருந்த இயற்கையின் எழிலைப் பருகி வருவார். அதே நேரத்தில் அவர் அங்குள்ள செடி கொடிகளின் பெயர், பண்பு, அவை பூத்துக் காய்க்கும் பருவம் முதலியவற்றையும் செம்மையாக அறிந்து வந்தார்.

இளமையில் அவர் வீட்டிற்கு அருகாமையிலிருந்த "ரெட் ஸ்கூல் ஹவுஸ்" என்ற பள்ளியில் பயின்று வருங்காலத்தும் இயற்கையைக் குறித்த கேள்விகள் பெருகிக் கொண்டே போயின. ஆசிரியர்களிடம் ஐயவினாக்களை அடுக்குவார். விளக்கம் கிடைக்கும்போது

மகிழ்ந்து ஏற்றுக்கொள்வார். அச்சிறு பள்ளியில் படித்தான பிறகு மாரிக்காலத்திற்கென்றமைந்த கல்விக் கழகமொன்றில் சேர்ந்து கற்றுவரலானார். ஒரு நூல் நிலையம் அவருக்குப் பெரிதும் உதவியாக இருந்தது. ஆனால் அவர் இளமையிலேயே தொழிற்சாலையொன்றில் குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்ய வேண்டியவரானார்.

பர்பாங்க் கூரிய அறிவு படைத்தவர். தாம் வேலை செய்துவந்த தொழிற்சாலையில் ஓர்நாள் பலர்கூடி, புல்லறியும் பொறியொன்றினை கழற்றிப் பூட்டிக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் ஒரு சிறு துண்டினைமட்டும் ஏற்றவிடத்து பொருத்தும் வகையறியாது விழித்தனர். யாவற்றையும் முதலிலிருந்தே கவனித்துக்கொண்டிருந்த சிறுவரான பர்பாங்க் அதைப் பொருத்திக் காண்பித்தார். அதன் பின்னர் சில நாட்களில் தமது முயற்சியாலேயே ஓர் பொறியினை அமைத்தார். ஈதறிந்த தொழிற்சாலை முதலாளிகள் அவருக்கு கூலியை உயர்த்தி மேலும் அவ்வாராய்ச்சிகளில் ஈடுபடும்படித் தூண்டினர். ஆனால் இயற்கை யெழிலில் தம்மைப் பறிகொடுத்த அவரது மனம் உயிரற்ற இயந்திரங்களுடன் பழகுவதைக் காட்டிலும் வண்ணத் தாவரங்களிடம் பழகுவதிலேயே சென்றுகொண்டிருந்தது. இயற்கைப் பொருள்கள் கவினுற விளங்கினும் அவற்றினும் மேலான அழகுள்ள புதுப்பொருள்களை உண்டாக்குவதிலும், அழகற்றவற்றையும் அழகுமிக்க பொருள்களாக மாற்றியமைப்பதிலுமே அவர் நாட்டம் வைத்திருந்தார். எனவே அவர் தோட்டம் பயிரிடும் தொழிலை மேற்கொண்டதில் ஆச்சரியமொன்றுமில்லை.

ஒருவித உருளைக் கிழங்கைத் தேர்ந்தெடுத்து ஏற்ற உரமிட்டு பக்குவமாகவும் ஏராளமாகவும் பயிரிட்டதன் பயனாய் எதிர்பார்க்கப்பட்ட உருளைக்கிழங்குப் பஞ்சம், நாட்டில் ஏற்படாது போயிற்று என்பதோடல்லாது அதனால் நாட்டிற்கு இரண்டரைக்கோடி டாலர் புது வருமானமும் கிடைத்ததாகக் கூறப்பட்டது. 'பர்பாங்க் உருளைக் கிழங்கு' இன்னும் அவர் பெயரை நிலை நிறுத்துவதாகும். அவர் 1875-ல் தமது உடல்நிலைக்கேற்ற தட்ப வெப்ப நிலையுள்ள இடந்தேடி பத்து டாலர் பணம், பத்து பர்பாங்க் உருளைக் கிழங்கு, சில நூல்கள் இவற்றுடன் சான் பிரான்சிஸ்கோவுக்கு அருகிலுள்ள ஓர் பள்ளத்தாக்கைச் சென்றடைந்தார். இப்பள்ளத்தாக்கு இயற்கை வனப்பு மிக்க செடி கொடி ஆகியவற்றால் அடர்ந்து அவரது நோக்கத்திற்கு ஏற்றதாகக் காணப்பட்டது. எனினும் அவர் அவ்விடத்தில் வேலையொன்றும் கிடைக்கப் பெறாமல் உணவு, உடை இவற்றிற்காகப் பெரிதும் துன்புற்றார். மரம் வெட்டுதல் கோழிக் கூண்டுகள் துடைத்தல் போன்ற வேலைகளைச் செய்தும் உயிர்வாழ முடிந்திலது. சிலசமயங்களில் இறைச்சிக் கடைகளுக்குச் சென்று அங்கு நாய்களுக்கென விடப்படும் எலும்புத் துண்டுகளில் ஒட்டியிருக்கும் தசைகளைச் சேகரித்து உண்டும் வாழ வேண்டிய நிலையேற்பட்டது. இறந்துபடும் நிலைமை அவர் இருமுறை யெய்தினர் என்றாலும் முயற்சியில் குன்றாது நோக்கத்தைக் காத்து வெற்றி பெறுவதிலுண்டான ஆர்வம் அவருக்கு உயிரை உதவிக்கொண்டே வந்தது போலும்.

பின்னர் அவருக்குத் தொடர்ந்து வேலைகள் கிடைத்து வந்தமையினால் அவர் சிறிது தொகையைச் சேர்த்து சாந்தரோசா (Santa Rosa) என்ற விடத்தில் ஒரு சிறு நிலத்தை விலை கொடுத்து வாங்கினார். தமது பெருமைப்பின் பயனாக அவ்விடத்திற்கு அவர் உலகின் உயிர்நிலை, என்று கூறத்தக்க சிறப்பினை நல்கினார்.

அங்கு அவர் ஒட்டு முறையைக் கண்டுபிடித்து அதன் மூலம் ஆயிரக்கணக்கான வாதுமைக் கன்றுகளை மிகக் குறைந்த காலத்திற்குள் தயாரித்து விற்பனை செய்து பெரும் புகழும் வருமானமும் அடைந்தார். *1893*-ம் ஆண்டு சாந்தரோசாவிலிருந்து எட்டு கல் தொலைவிலிருந்த செபாஸ்டபூலில் ஒரு பெரிய நிலப்பகுதியைப் பெற்று அங்கு தமது ஆய்வு புலத்தை (Proving grounds) நிறுவினார். *1903*-ம் ஆண்டு 'கலிபோர்னியா அறிவியல் கழகத்தார்' அவருக்கு ஒரு பொற்பதக்கமும், *1905*-ம் ஆண்டிலிருந்து பத்து ஆண்டுகளுக்கு ஆண்டொன்றிற்கு பதினாயிரம் டாலர் பணமும் உதவினார்கள். அவரது ஆராய்ச்சிகளின் பயனாக நாகதாளியை சுவையுள்ள ஓர் உணவுப் பொருளாகுமாறு அதன் முள்ளைப் போக்கி சுவையும் தந்தார். ஒட்டு முறையின் மூலம் அவர் பிரைமஸ் பெர்ரி பிளம்காட் என்ற புதிய பழவகைகளை உண்டாக்கித் தந்தார். அதிக விரைவாக வளர்ந்து பயன் தரத்தக்க ஓர் வித புதிய மரத்தை உண்டாக்கினார். சஸ்தாடெய்சி என்னும் அல்லி மலரை உண்டாக்கி அதை 6, 7, அங்குல குறுக்களவுள்ளதாக மலரும்படிச் செய்தார்.

டாலியா என்ற ஒருவகை மலரிலிருந்த கெட்டநாற்றத்தைப் போகச்செய்து நறுமணம் கமழ்வதாகச் செய்தார். மற்றும் இலந்தை, திராட்சை இவற்றைப் பல்வேறு விதங்களில் திருத்தியமைத்தார். இவற்றின் விற்பனை உரிமையைத் தமக்கெனவே வைத்துக்கொண் டிருப்பாராயின் அவர் கோடிக்கணக்கில் பொருளீட்டி யிருக்க முடியும். ஆனால் அவர் அவ்வாறு செய்தாரில்லை. மக்களினத்திற்கு உழைக்க வேண்டும் என்ற அந்த தூய எண்ணம் அவரை அறிவியல் ஆராய்ச்சித் துறையில் மட்டுமல்லாது மதம், கடவுள் என்றவற்றிலும் ஆராயும் துணிவைத் தந்தது.

பர்பாங்க் அயராது உழைப்பவர். எல்லா வேலைகளையும் தாமே நேரில் பார்த்து செய்து வருவார். அவருடைய தோட்டத்தில் வேலை செய்வதை மக்கள் பெரிதும் விரும்பினர். அவருக்கு உலகின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான கடிதங்கள் வருவதுண்டு. ஒரு முறை இரண்டே மாதங்களில் பதினையாயிரம் கடிதங்கள் வந்தனவாம. எனவே அவர் "உங்கள் கேள்விகளுக்கு வேறு எங்காவது பதில் கிடைக்கும் என்றிருந்தால் தயவுசெய்து என்னைக் கேட்க வேண்டாம்" என்று அச்சிடப்பட்ட கடிதங்கள் வைத்திருந்தார். அவ்வாறே அவரைக் காண வருவோரின் தொகையும் கொஞ்சமல்ல. தமது வேலைகளுக்கு இடையூறாகுமாகையினால் அவர் யாரிடமும் 5 நிமிடங்களுக்கு மேல் பேசுவதில்லை. அவருடைய ஆய்வு புலத்தைக் காண வருவோருக்கு கட்டணம் விதித்திருந்தார். அவர் ஆய்வு புலத்திற்குள் சென்று விடுவாராயின் காலம்செல்லுவதே தெரியாது. அவர் ஒவ்வொருநாள் படுக்கைக்குச் செல்லும் பொழுது அலுத்துப்போயிருப்பாரென்றாலும் படுக்கையிலும் எதையாவது சிந்தித்துக் கொண்டே யிருப்பார்.

அவரது தொண்டினையும் ஆராய்ச்சி மேன்மையினையும் பாராட்டி 'ஐக்கிய நாடுகள்—கானடா செடி—விலங்கு வளர்ப்புக் கழகம்' (Plant and Animal Breeders' Association of the United States and Canada) அவரை ஒரு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டது. நியூயார்க் பகுத்துணர்வு சங்கத்தின் (Free Thinker's Society of New York) உறுப்பினராக உவந்தேற்றுக் கொள்ளப்பட்டார். டப்ஸ் கல்லூரியார் (Tufts College) அவருக்கு டாக்டர் (Doctor of Science) பட்டம் வழங்கினர். பின்னர் அவர் 'லிலாண்டுஸ்டான் போர்டு' பல்கலைக்கழக விரிவுரையாளராக (Lecturer of Scientific Plant Evolution) அமர்த்தப்பட்டார். தமது கண்டு பிடிப்புகளைப்பற்றி ஓர் நூலும், எப்படி தாவரங்கள் மக்களுக்கு உழைக்குமாறு பழக்கப்படுகின்றது' (How plants are trained to work for men) என்ற நூலும் இயற்றினார். மற்றும் அவர் வில்பர் ஹால் என்பாருடன் சேர்ந்து 'ஆண்டுகளின் அறுவடை' (Harvest of Years) என்ற நூலையும் வெளியிட்டார். இத்தனை சிறப்புகள் பெற்று மக்கட் பணியாற்றிய பெரியார் உலகை வருந்த விடுத்து 1926-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11-ம் நாள் மறைந்தார்.

ஓயாத உழைப்பால் அவர் உடல் கருத்தும் மெலிந்தும் போயிருந்தது என்றாலும் கம்பி போன்ற நரம்புகளும் வன்மையும் பொருந்தியவர்; சுறுசுறுப்புள்ளவர்; பேசுவதிலும் கேட்பதிலும் வல்லவர். தமது தவறுதல்களைத் தாமே ஒப்புக்கொள்ளும் வெள்ளை யுள்ளமும் அன்புள்ளமும் கொண்டவர். காலையில் எழுந்தவுடனும் படுக்கைக்குச் செல்லும் போதும் தமது அன்னையாரைக் கண்டு வணக்கம் கூறுமலும் விசாரியாமலும் இரார். பேரறிஞரான ஹ்யூகோ டிவீரிஸ் என்பாரும் தாமஸ் ஆல்வா எடிசனும் அவரது நெருங்கிய நண்பர்கள். எமர்சன் ஹென்ரி தோரோ (Henry Thoreau), சார்லஸ் ராபர்ட் டார்வின், அலெக்சாண்டர் வான்ஹம்போல்ட் ஆகியோர் அவர் விரும்பிக்கற்ற நூலாசிரியர்களாவர்.

அறிஞரான பர்பாங்க் மிகத் தெளிவான தம் கருத்துக்களை ஒருவருக்கும் அஞ்சாது வெளியிட்டு வந்தார். மதத்தைப்பற்றியும் கடவுளைப்பற்றியும் எதிர்க்க வேண்டி நேர்ந்த காலத்துங் கூட அவர் தமது புரட்சிகரமான கருத்துக்களை மிக்க அமைதியுடன் கூறிவந்தார். மதமும் கடவுளும் அறிவிற்கு ஆராய்ச்சிக்கு முட்டுக்கட்டைகள் போன்றிருப்பன என்ற கருத்துள்ளவர். அவர் தம் தோளுழைப்பில் ஆராய்ச்சியறிவில் நம்பிக்கைக் கொண்டவர். "வாழ்க்கைச் சிக்கல்கள் அறுந்து வளமுள்ளதாக விளங்க வேண்டுமானால் மதக் கோட்பாடுகள் மட்டுமல்ல, மதம் என்று ஒன்று வேறுடன் களையப்படவேண்டும்," என்று கூறுகிறார். அவரே கூறுவது போன்று, இயற்கையுடன் நன்கு பழகியதன் மூலமும் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தியதன் மூலமும் அவர் இயற்கைக்கு கவர்ச்சியையும் கவினையும் நல்கினார்.

'சமயம்' என்பதற்கு மிகத் தெளிவான பொருள் கூறுகின்றார். இயற்கையுடன் பழகுவதனாலேயே குறுகிய நோக்கம் ஒழிந்துபடும். பொறாமை, மூர்க்கத்தனம்; வீண்பெருமை

போன்ற இழிகுணங்களும் ஒழிந்து உலகுக்கு உழைக்க வேண்டும் என்ற அந்த உயரிய நோக்கம் வந்தடையும். இவற்றையன்றி மத மூடநம்பிக்கையானது உள்ளத்தை தளர்வடையச் செய்து முன்னேற்றததுக்கு தடையாக இருக்கிறது. எனவே சமயம் என்ருல் குறுகிய நோக்கம் இழிகுணங்கள் இவைகளை விட்டொழித்து உள்ள உறுதியுடன் முன்னேறி உலகுக்கு உழைக்கும் அந்த உயரிய பண்புதான். இது மத மூடக் கொள்கைகளுக்கு அடிமைப்படாதிருந்தால் இயற்கையாகவே வந்தடையும். இயற்கையிலேயே மக்கள் பகுத்தறியும் இயல்புள்ளவர்களாக இருக்கின்ருர்கள். அதை உபயோகப்படுத்தத் தவறுவது கூடாது. மக்கள் பிறரால் அறிவூட்டப்படுதல் இயற்கைக்கே விரோதம் என்பது அவர்கண்ட உண்மை. இதை அவர் பன்முறையும் உளம் நைந்து கூறியிருக்கிருர். எனவேதான் அவர் விவலிய நூல், கடவுள் வாக்கு என்பதை ஒப்புக்கொள்ள மறுத்தார்.

கடவுள் எல்லாம் வல்லவர் என்பதையும் அவருக்கு மக்கள் அன்பு செலுத்த வேண்டும் என்பதையும் அவர் எட்டியென வெறுத்தார். இவை மனிதன் தானுகவே தன் அறிவுக்கும் அன்புக்கும் ஏற்படுத்திக் கொள்ளும் தடுப்புச் சுவர் என்பதாகக் கண்டார். எல்லாம் வல்லவர் உண்டாக்கிய உலகில் மனிதன் தன் அறிவைக்கொண்டு ஆண்மையைக் கொண்டு செய்ய வேண்டுவது ஒன்றுமிருக்கக் கூடாதல்லவா? அவனுக்கு ஆராயும் தன்மையும் பகுத்தறியும் தன்மையும் இருக்க அவசியமில்லையல்லவா? மனிதன் தன் அறிவைக்கொண்டு ஆற்ற வேண்டிய பணிகள் அநேகம் இயற்கையாகவே கூட இருக்கும் பொழுது அதற்கு நேர்மாருன 'கடவுள் எல்லாம் வல்லவர்' என்ற சொல்லுக்கு 'அடிமைப் புத்திக்கு வித்து' என்பதைத் தவிர வேறு பொருளிருக்க முடியாது. எனவேதான் அவர் அதை வெறுத்தார். அவருக்கு மதப் பற்றும் கடவுள் பக்தியும் அற்ற காரணத்தால்தான் எல்லாவற்றினிடமும் அன்பு காட்ட முடிந்தது. மாருக மதப் பற்றுள்ள ஒருவன் தன் இல்லாத கடவுளே சிறந்ததெனக் கொண்டு அதனிடம் தன் தலையாய காதலைச் செலுத்துகின்ருன். அப்பொழுது அவன் தன் கண்ணெதிரில் இருக்கும் உயிர்களிடம் அன்பு செலுத்தக் கூடாதவனுகிருன். அதாவது தன் கடமையினின்றும் தவறுகின்ருன் என்பது அவர் நம்பிக்கை.

ஒருமுறை "உமது கோட்பாடுகள்தாமென்ன?" என்ற கேள்விக்கு விடுத்த பதில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியனவாகும். "மக்களின் இன்ப வாழ்வுக்கென முழு மனதுடன் உழைப்பதும் உண்மைக்குப் பாடுபடுவதும் போதுமானது. இவையன்றி பழிவாங்கும் கடவுளிடமோ, தீமிக்க நரகத்திலோ எனக்கு நம்பிக்கையில்லை. அத்தகைய தொடர்புங் கொள்ளவில்லை" என்பதாகும். அவர் மோட்ச நரக பித்தலாட்டப் போக்கை நம்பாதவர். அவர் தமக்கு துறக்கம் வருவதாக இருந்தாலும் விரும்பாதவர். அது இல்லை யென்பதால் மட்டுமல்ல, உண்மை உழைப்பையும், மக்களுடன் சேர்ந்து இன்பமாக வாழ்வதையுமே அவர் விரும்பினுர். மோட்சம் போக விரும்பாதது போன்றே இல்லாத நரகத்தைப்பற்றிப் பயமுறுத்தியபோது அதற்குச் செல்லத் தாம் அஞ்சவில்லை யென்றும் கூறினுர். இது அவரது 'மோட்ச நரகம் இல்லை' யென்ற திடமனதைக் குறிக்கின்றன.

அவர் தமது கடைசிக் காலத்தில், மத குருமார்களைக் கண்டித்து புல்லறிவாளரான அவர் தம் போக்குக்குக் கசையடி தந்துபொய் கடவுளர்களை உண்மைப் பெரியார்கள் எதிர்த்தொழிக்கும் காலம் சேய்மையிலில்லை; அண்மையிலேயேயுள்ளது என்று கூறினுர். அவர் தம் கடைசிக்கூற்றும் பொய்க்கவில்லை யென்பது கண்கூடு. பலநாடுகளிலும் மதவாதிகளின் புரட்டுக்கள் வெளியாக்கப்பட்டுவிட்டன. நம் நாட்டிலும் அப்பணி நடைபெற்று வருகின்றது. அவர் தம்மை ஓர் 'அஞ்ஞானியே' என்றும் வீரத்துடன் ஒப்புக்கொண்டார். எனினும் அவர் வாழ்ந்த காலத்தில் அவரையெதிர்த்து வெற்றி காணுத கிருத்தவ மதவாதிகள் அவர் இறந்தவுடன் அவர் யெய்தியுள்ள புகழைக் கண்டு, மெல்ல மெல்ல சவக்குழி நோக்கி நடந்துகொண்டிருக்கும் மதம் அவரது புகழொளியில் சற்றே இளைப்பாறக் கருதியே போலும் அவரை ஓர் 'மெய்ஞானியே' என ஏற்றுக்கொண்டது. இது மதப் புரட்டர்களின் பரம்பரைப் பித்தலாட்டப் பண்புக்கோர் எடுத்துக் காட்டாகும்.

தென்னிந்தியாவில் புதைபொருள் ஆராய்ச்சி

திரு. P. R. ஸ்ரீநிவாசன், M. A.,

Curator for Archology and Art, Government Museum Madras.

★

உலகின்கண் மனிதன் தோன்றி இன்றைக்குச் சுமார் ஐந்து லட்க்ஷம் வருடங்களுக்கு மேலாகின்றன. நெடுங்காலம் வரை அம்மனிதன் பிராணிகளைப் போன்றே காலம் கழித்து வந்ததாகத் தெரிகிறது. சுமார் முப்பது நாற்பதாயிர வருடங்களுக்கு முன்னரே அவன் முழு மனிதத் தன்மையை பெற்றவனானான். இதற்குப் பிறகும், நெடுங்காலம் வரை பண்பாடற்ற பாமரனாகவே அவன் காலத்தைக் கழித்தான். அப்பொழுது அவன் மலைக்குகைகளிலும், மரத்தின்மீதும் வசித்தான்; உணவுக்காகத் தாவரங்களையும், சமைக்காத மாமிசத்தையும் உபயோகித்து வந்தான் எனத் தெரிகிறது. அவ்வமயம் தற்காப்புக்காகவும், உணவு சேகரிப்பது போன்ற ஏனைய வேலைகளுக்காகவும், மரத்தாலும் கற்களாலுமான கருவிகளை உபயோகித்து வந்தான். மரக்கருவிகள் அழிந்தன போலும்; கற்கருவிகள் கிடைத்திருக்கின்றன. இவ்விதமாகவே இன்றைக்குச் சுமார் பதினையாயிரம் வருடங்களுக்கு முன் வரை அவன் காலம் நடத்தி வந்தான். இக்கால வரம்பிற்குள், அவனால் உபயோகிக்கப்பட்ட கருவிகள் மனித வர்க்கத்தால் ஆக்கப்பட்ட கருவிகளில் மிகப் பழையவையாகும். அவைகள் கரடு முரடான ஒழுங்கற்ற தொரு முறையில் ஆக்கப் பட்டுள்ளன. இக்காரணத்தால் அவற்றைப் **பழையகற்காலக்** (Palaeolithic Age) கருவிகள் என வழங்குகிறார்கள். இதற்குப் பிறகு அப்பண்டை மனிதன் சிலகாலம் வரை மிகவும் சிறிய கற்கருவிகளை உபயோகித்து வந்தான். இவைகளை இடைக்கற்காலக் (Mesolithic Age) கருவிகள் என வழங்குகிறார்கள். இன்றைக்குச் சுமார் எட்டு முதல் பத்தாயிர வருடங்களுக்கு முன்பே மனிதன் பண்பாட்டு நிலைமையின் ஆரம்பத்தை எட்டிப்பார்த்தான். அப்பொழுது முதல் மனிதன் கற்கருவிகளை உபயோகித்தாலும், அவைகளை அழகுள்ளவைகளாகவும் வழவழப்பானவைகளாகவும் ஆக்கலானான். இவற்றைத் தவிர பல்வேறு நுண்ணிய வேலைகளுக்கான சிறிய கற்கருவிகளையும் செய்தான். இவ்வகைக் கருவிகள் **புதிய கற்காலக்** (Neolithic Age) கருவிகள் என வழங்கப் படுகின்றன. இக்காலத்திலிருந்து தான் மனிதன், மாமிசத்தை வேகவைத்து உண்ணவும், பானை சட்டிகள் செய்யவும் வண்டிகள் செய்து கொள்ளவும் கற்றான். இதற்குப் பிறகும் சிறிது காலம் வரை மிகவும் **சிறிய கற்** (Microlith) கருவிகளை உபயோகித்தான். இன்றைக்குச் சுமார் ஆறாயிரம் ஏழாயிரம் வருடங்களுக்கு முன்னாலிருந்து மனிதன் கூட்டமாக ஊர்களில் வசித்து வரலானான் என்பதற்குச் சான்றுகள் உலகில் சில இடங்களிலிருந்து கிடைத்து இருக்கின்றன. இதற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பிறகே பெரியபட்டணங்களும் அரசாங்கங்களும் உண்டாயின. இவைகளின் சின்னங்கள் எகிப்து, மெசாபடேமியா, கிரீட் முதலிய இடங்களில் கிடைத்திருக்கின்றன. இக்காலம் முதல் கற்கருவிகள் குறைந்து வெண்கலம செம்பு இவற்றாலான கருவிகளை மனிதன் அதிகமாக உபயோகிக்கலானான். இதனால் இக்காலத்தை **வெண்கலக் காலம்** (Bronze Age) என்கிறார்கள். இந்த வெண்கலக் காலத்தைச் சேர்ந்ததாகவே சிந்து நதிக்கரை நாகரிகத்தைக் கூறுகிறார்கள். சீனா, எகிப்து முதலிய பல இடங்களில் இக்காலம் முதல் அரசாங்க, சமூக வரலாறுகளைத் தொடர்ந்து அறியக் கூடிய சான்றுகள் கிடைத்திருக்கின்றன. கி. மு. ஆயிரம் அல்லது தொள்ளாயிரமாவது வருடத்திலிருந்து வெண்கலக் கருவிகள் வழங்கலாயின. இப்பொழுதிலிருந்து தான் இரும்புக் காலம் (Iron Age) ஆரம்பமாயிற்று. இக்காலம் முதல் உலகத்திலுள்ள பல தேசங்களின் சரித்திரங்களையும் தொடர்ந்து அறிய முடிகிறது.

நம் பாரத நாட்டின் சரித்திரத்தைக் கி. மு. ஆறுவது நூற்றுண்டிலிருந்துதான் சிறிது சிறிதாகக் தெரிய முடிகிறது. அதிலும் தென்னிந்தியாவின் வரலாறு சற்றுப் பிற்காலத்திலிருந்தே தெரியவருகிறது. இதற்குப் பிற்காலத்தில் பெர்ஸியா, கிரீஸ், ரோம் போன்ற பல அரிய நாகரிகங்கள் தோன்றி மறைந்தன. அவை ஓங்கி இருந்த காலங்களில் ஆக்கப்பட்ட கட்டடங்கள், ஓவியங்கள், சிற்பங்கள், கல்வெட்டுக்கள் எல்லாம் இயற்கை செயற்கை மாறுதல்களால் பாழடைந்தன. இச்சின்னங்கள் எல்லாம் எந்தெந்தக்காலத்தைச் சேர்ந்தவை என்று அநேகமாகத் திட்டமாகச் சொல்ல முடியுமானதால் இவை சரித்திரகால (வரலாற்றுக்கால)ப் பொருள்கள் என்று பெயர் பெற்றன. ஆரம்பத்தில் கூறிய கற்காலக் கருவிகள் முதலியவற்றைப்பற்றி உறுதியாக ஒருகால வரம்பு சொல்ல முடியாததால் அவற்றைச் சரித்திர முற்காலத்தைச் சேர்ந்தவை என்று வழங்குகிறுர்கள். சிற்சில தேசங்களில் சரித்திர காலத்திலேயே வசித்து வந்த மக்களால் ஆக்கப்பட்ட பல பொருள்கள் கிடைத்திருக்கின்றன. ஆனல் இவர்களைப் பற்றி வேறு ஒரு வித வரலாறும் தெரியாததால் இச்சின்னங்களை அவற்றின் பெயரைக் கொண்டே வழங்கி வருகிருர்கள்.

தொல் (புதை) பொருள் ஆராய்ச்சி (Archaeological Research): இவ்விதம் ஒரு தேசத்தில் மனிதன் தோன்றிய காலம் முதல் இன்று வரையுள்ள சரித்திரத்தை மட்டுமின்றிப் பண்பாட்டைப் பற்றியும் அறிய வேண்டுமாயின், மேல் கூறிய பண்டைப் பொருள்களை ஆராய்ந்து பார்ப்பதால் மட்டும் தெரிய வரும். இவ்விதம் பல தேசங்களின் பண்டைப் பொருள்களையும் ஆராய்கின்றபொழுது ஆங்காங்கே பற்பல காலங்களில் ஏற்பட்ட அரசாங்க, மதவேறுபாடுகள் போன்ற பல அரிய விஷயங்கள் தெரிய வருகின்றன.

மேற்கூறிய சரித்திர முற்கால, சரித்திர காலச் சின்னங்கள் எல்லாம் பூமியின் மேற்பரப்பில் இருக்கவில்லை. சரித்திர முற்காலத்தைச் சேர்ந்த பெரும்பான்மையான சின்னங்கள், ஆயிரக் கணக்கான வருடங்களுக்கிடையில் பூமியினுட் புதைந்தன. சரித்திரகாலத்தைச் சேர்ந்த சின்னங்களில் ஒரு பகுதியும், கண்காணிப்புக் குறைவினுலும், அரசாங்கங்களுக்கு இடையே ஏற்பட்ட சண்டைகளின் காரணத்தாலும், வேறு மதத்தினர் ஆதிக்கம் பெற்று அவர்களால் அழிக்கப்பட்டதாலும், நாளடைவில் பாழடைந்தும், மண் மேடிட்டும் போயின. அவற்றைப்பற்றிய வரலாறுகள் இதனுல் தெரியாமல் போய்விட்டன. இப்படிப் பட்ட புதைந்துகிடக்கும் பண்டைக்காலச் சின்னங்களைத் தோண்டி எடுத்து அவற்றை ஆராயவேண்டி வருகிறது. இவ்விதம் ஆராய்ச்சி செய்வதற்கென உலகில் பல தேசங்களில் அரசாங்க புதைபொருள் ஆராய்ச்சி இலாக்காக்கள் அல்லது இதற்கெனத் தனிப்பட்ட கழகங்கள் இருக்கின்றன. இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களில் இருக்கும் இவ்வித கழகங்களின் இடையருத, சலிக்காத முயற்சியாலும், நுட்பமாக ஆருய்ச்சி செய்யும் திறனுலும், எகிப்து, மெசப்பொடேமியா, கிரீட் கிரிஸ் முதலிய தேசங்களின் பண்டை வரலாறுகளைத் தெளிவாக அறிய முடிந்திருக்கிறது.

இந்தியாவில் புதை பொருள் ஆராஎச்சி.

நம் பாரத நாட்டிலும் சென்ற நூற்றைம்பது வருடங்களுக்கு மேலாகப் புதைபொருள் ஆராய்ச்சியில் ஒருசிலர் ஈடுபட்டு அதன் விளைவாக நம் நாட்டின் பழைய சரித்திரத்தின் சிக்கலான பல கட்டங்கள் தெளிவுற்றன. இதற்குச் சான்ருக மூன்று முக்கிய நிகழ்ச்சிகளை இங்கே குறிப்பிடலாம்: (1) கி. பி. 1833ம் வருடத்தில் அசோகரின் கல்வெட்டுகளைப் படித்தது; (2) மிகப் பழைய முறையில் உள்ள பழைய கற்காலக் கருவி ஒன்றை முதன் முதலாக 1863-ம் வருடத்தில் கண்டு பிடித்தது; (3) இந்திய நாகரிகம் கி. மு. மூன்ருவது ஆயிரமாண்டில் அல்லது அதற்கு முன்னரேயே மிகவும் உயர்ந்த நிலைமையில் இருந்ததை நிரூபிக்குமாறு உள்ள சிந்து நதிக் கரையில் சில இடங்களில் சின்னங்கள் கண்டு பிடித்தது.

இவைபோன்று இன்னும் பல அரிய பண்டைப் பொருள்களும் புதைபொருள் இயல் வல்லார் ஒரு சிலரால் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன.

தென்னிந்தியாவில் புதைபொருள் ஆராய்ச்சி.

தென்னிந்தியாவில் சரித்திரமுற்காலத்தைச் சேர்ந்த சின்னங்களும், சரித்திர காலத்தைச் சேர்ந்த சின்னங்களும், காலவரையறை செய்ய இயலாத சில பொருள்களும் கடந்த நூறு வருஷங்களுக்குள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

சரித்திர முற்காலப் புதை பொருள்கள்

(Prehistoric Antiquities): இவை பழைய கற்கால, இடைக்கற்கால, புதிய கற்காலக் கருவிகளாகும். பல்வேறு இடங்களிலிருந்து இவை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைக் கண்டு பிடித்ததில் ஒரு முக்கியமான நிகழ்

சியை இங்கே குறிப்பிடவேண்டியதாகிறது. அதாவது, இந்தியாவிலேயே முதன் முதலாக நிச்சயமான பழைய கற்காலக்கருவி ஒன்று எங்கே கண்டுபிடிக்கப்பட்டதென்றால், அது சென்னைக்கு அருகேயுள்ள அத்திரம்பாக்கத்தில் 1863-ம் வருடத்தில் ராபர்ட் புரூஸ் புட் (Robert Bruce Foote) என்ற ஆங்கிலேயரால் கண்டுபிடிக்கப்பட்டதாகும். இது இப்பொழுது சென்னை அரசாங்க மியூசியத்தில் இருக்கிறது. தென்னிந்தியாவில், அதிலும் முக்கியமாகச் சென்னைக்கருகே உள்ள சில கிராமங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பழைய கற்காலக் கருவிகள், உலகில் பல்வேறு இடங்களிலிருந்து கிடைத்திருக்கும் ஏறக்குறைய ஒரே காலத்தைச் சேர்ந்த பழைய கற்காலக் கருவிகளின் வேலைப்பாட்டை விட்டுச் சற்று மாறுபட்டு இருக்கின்றன. இக்காரணத்தினால் இவை "மெட்ராஸ் வேலைப்பாடு" (Madrasian Type) உடையவை என வழங்கப்பட்டன. சில நாட்களுக்கு முன் மைசூர் இராச்சியத்திலும் பழைய கற்காலக் கருவிகள் கண்டுபிடித்ததாகச் செய்தி அறிவிக்கப்பட்டது.

சாயேர்புரம் கிராம இடைக்கற்காலக்கருவிகள் :

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள இந்த ஊரில் பல சிறிய கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை பழைய கற்காலத்துக்கும், புதிய கற்காலத்துக்கும் இடைப்பட்ட (Mesolithic) காலத்தைச் சேர்ந்தனவென்று கூறலாம்.

சங்கனக்கல்லு கிராமச் சிறிய கற்கருவிகள் :

பெல்லாரி ஜில்லாவிலுள்ள இந்தக் கிராமத்தில் எழெட்டு வருடங்களுக்குமுன் அரிய சிறிய கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை புதியகாலத்தை அல்லது அதன் இறுதிக் காலத்தைச் சேர்ந்தவையாகும். புதிய கற்காலக்கருவிகள் பல இடங்களிலிருந்து கிடைத்திருக்கின்றன. இவைகள் எல்லாம் கற்காலப் பொருள்களாகும். முன்னரே கூறியபடி, உலகில் பலதேசங்களிலும், நம் பாரத நாட்டிலும் கற்காலத்துக்கு அடுத்தபடியாக வெண்கலக் காலம் இருந்ததற்குச் சான்றாக வெண்கலக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. தென்னிந்தியாவில் பிரம்மகிரி (மைசூர்), ஹைதராபாத் போன்ற இடங்ளிலிருந்து இவ்வகைக் கருவிகள் கிடைத்திருக்கின்றன.

இரும்புக்காலப் பொருள்கள் :

(Iron Age) அடுத்தபடியாக இரும்புக்காலத்தைச் சேர்ந்த சின்னங்கள் ஏராளமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவை இரண்டு மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவைகள் எல்லாம் பெரும்பாலும் பண்டைமக்கள் மயானங்களாக உபயோகித்த இடங்களிலிருந்து கிடைத்தவைகளாகும்.

நீலகிரி மண் பாண்டங்கள் :

இவற்றில் நீலகிரியில், பிரீக்ஸ் (J. W. Breeks) என்ற ஆங்கிலேயரால் கண்டுபிடிக்கப்பட்ட மண்பாண்டங்கள் குறிப்பிடத்தக்கவை. இவைகள் அழகற்ற முறையில் செய்யப்பட்டுள்ளன. இவற்றின் ஒரு முக்கிய குணமானது, இவற்றின் மூடியின்மேல் செய்யப்பட்டிருக்கும், பிராணிகள் பறவைகள் இவற்றின் பொம்மைகளாகும். இவைகளைத்தவிர ஓரிரண்டு வெண்கலப் பாத்திரங்களும் இங்கே அகப்பட்டன.

ஆதித்த நல்லூர் புதைபொருள்கள் :

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள இந்த ஊரில் ஒருபெரிய பழைய காலத்திய மயானவெளியிருந்து முதுமக்கள் தாழிக (Urns) ளும் அவற்றுடன் தங்கம், வெண்கலம், இரும்பு முதலியவற்றாலான சாமான்களும், அழகிய பானைசட்டிகளும் கண்டு பிடிக்கப்பட்டன. இவ்வளவு பெரிய பரப்பில் இவ்வளவு ஏராளமான எண்ணிக்கையில் பல புதிய விஷயங்களைத் தெரிவிக்கும் புதை பொருள்கள் கிடைத்திருப்பது இங்கேதான்.

சங்கவரம் கிராம நீண்ட தாழி (Sarcophagus) :

கடப்பை ஜில்லாவிலுள்ள இக்கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட செம்மறியாடு போன்று செய்யப்பட்டுள்ள ஆறு கால்கள் கொண்ட நீண்ட தாழி ஓர் அதிசயப் பண்டைப் பொருளாகும். இதில் இறந்தவர்களின் எலும்பையோ எலும்புக்கூட்டையோ அடக்கம் செய்திருக்கலாம்.

கோயம்புத்தூர் மண் பாண்டங்கள் (Pottery) :

இவ்வூருக்கருகே சில இடங்களில் உள்ள மயானங்களிலிருந்து ஒரு புதிய வகை மண் பாண்டங்கள் கிடைத்தன. இவை மெல்லியவையாகவும் மேற்புறம் அலை போன்ற கோடுகளுடன் வழவழப்புடையவையாகவும் இருக்கின்றன.

பெருங்கல் வளைவுப் புதைகுழிகள் (Megalithic Monuments) (செங்கல்பட்டுஜில்லா): இந்த ஜில்லாவில் பல இடங்களில் பெரும் கற்களைக் கொண்டு வட்டமாக வளைக்கப்பட்ட இடங்களில், முதுமக்கள் தாழிகளிலோ அல்லது

கல்லறைகளிலோ மனித எலும்புத் துண்டுகளும் அத்துடன் பானை சட்டிகளும், இரும்பாலான ஆயுதங்களும் கிடைத்திருக்கின்றன. உதாரணமாகப் பெரும்பேர், சானூர், அமிருத மங்கலம் போன்ற இடங்களில் அகப்பட்ட புதை பொருள்களைக் கூறலாம்.

முன்னரே கூறிய படி இவ்வகைப் புதை பொருள்களின் உட்பொருள் யாது? இவை உண்டானதற்குக் காரணம் என்ன? உண்டாக்கியவர் யார்? இவற்றின் காலவரம்பு என்ன? என்பவைகளை இன்னும் நிச்சயமாக முடிவு கட்டிச் சொல்ல முடிய வில்லை. ஆனால் சங்க நூல்களில் இவ்வகை இடுதாழி, கல்லறைகளைப் பற்றிய சில விவரங்கள் கிடைப்பதிலிருந்து அந்த நூல்கள் தோன்றிய காலத்திற்குச் சற்று முன்பும் பின்பும் இப்பழக்கங்கள் இந்த நாட்டில் நிலவி இருந்தன என்பது தெரிய வரும்.

சரித்திர காலப் புதை பொருள் (Antiquities of Historical times):

தென்னிந்தியாவைப் பொருத்தமட்டில் இக்காலத்திய புதை பொருள் ஆராய்ச்சியால் பல அரிய விஷயங்கள் தெரிய வந்திருக்கின்றன. இக்காலப் பண்டைப் பொருள்களை, கல்வெட்டுக்கள், சிற்பங்கள், ஓவியங்கள், கட்டடங்கள், நாணயங்கள் என்ற பகுதிகளாகப் பிரிக்கலாம். நாணயங்களைப்பற்றி இங்கே சுருக்கமாகக் கூறுவோம்.

கல்வெட்டுக்கள், நம் நாட்டுச் சரித்திரத்துக்கும், பண்பாட்டின் முக்கிய அம்சமான சமுதாய வாழ்விற்கும் வேண்டிய அரிய பல விஷயங்களை இவற்றிலிருந்தே அறிய முடிகிறது. இரண்டாவதாகக் காலக்கிரமத்தில் நம் நாட்டின் எழுத்துக்கள் எவ்விதம் மாறு பாடடைந்தன? எந்தெந்த மொழிகள் எந்தெந்தக் காலத்தில் கல்வெட்டுக்களில், அதாவது எழுதுவதற்கு உபயோகிக்கப்பட்டன? என்பதும் தெரிய வருகிறது.

ஒரு நாட்டின் பண்பின் சிறப்பு அந்நாட்டில் எண்ணும் எழுத்தும் வளர்ச்சியடைந்திருப்பதிலிருந்து அறியலாம். தென்னிந்தியா தொன்று தொட்டே பண்புமிக்க நாடு என்பதை உணர்வதற்கு அரிய சங்கத்தமிழ் நூல்கள் இருக்கின்றன. ஆயினும் இவற்றின் காலம் இன்னும் நிச்சயமாக வரையறுக்கப்படவில்லை. ஆனால், உள்ளதை உள்ளபடியும் ஓரளவுக்கு நிச்சயமான கால வரம்புகளைக் கொடுக்கக் கூடியதுமான தொல் பொருள் ஆராய்ச்சியின் மூலம், கி. மு. மூன்றாவது நூற்றாண்டிலேயே தென்னிந்தியாவில், முக்கியமாகத் தமில் நாட்டில், எழுதுவதற்குத் தமிழ் மொழியை உபயோகித் திருப்பது தெரியவரும். இதற்குச் சான்று மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள சில மலைக் குகைகளில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுக்களாகும். இவை கி. மு. மூன்றாவது நூற்றாண்டில் வழக்கிலிருந்த பிராமி என்ற எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. ஆனால் உபயோகித்த மொழியோ **என்றும் உள தென் தமிழாகும்.** இக் கல்வெட்டுக்கள் பௌத்த சமயத்தவரால் எழுதப்பட்டவை எனச் சில புலவர்கள் கருதுகிறார்கள். அடுத்தபடியாகச் சித்தன்னவாச (புதுக்கோட்டை) லிலிருக்கும் மலைக்குகையில் சமண சமயத்தினரால் எழுதப்பட்ட கி. மு. முதலாவது நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்களாகும். அவற்றிலுள்ள எழுத்தும் பிராமி மொழியில் எழுதப்பட்ட தமிழாகும்.

அரிக்கமேடு பானைத்துண்டு எழுத்துக்கள்.

மேற்கூறியவற்றை உறுதிப்படுத்துவது போன்ற ஒரு நிகழ்ச்சி 1945-ம் வருஷத்தில் பாண்டிச்சேரிக் கருகேயுள்ள அரிக்க மேடு என்ற கிராமத்தில் புதை பொருள்களைத் தோண்டி எடுத்தபோது அகப்பட்ட பானைத் துண்டுகளின் மேல் எழுதப்பட்டிருக்கும் எழுத்து வரிகளாகும். இவற்றிலும் எழுத்து பிராமியே. இவற்றுடன் அகப்பட்ட உறுதியாகக் காலம் சொல்லக் கூடிய வேறு சில பொருள்களின் ஆதாரத்தைக் கொண்டு, இந்த எழுத்து வரிகள் கி. பி. முதலாவது நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பது நிச்சயிக்கப்பட்டுள்ளது. இதிலும் தமிழ்மொழியே உபயோகிக்கப் பட்டிருப்பது நன்கு கவனிக்க வேண்டிய விஷயமாகும். ஏனெனில் இந்தியாவின் வேறு பாகங்களிலிருந்து கிடைத்திருக்கும் இதே காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் எல்லாம் பிராமி எழுத்திலேயே இருந்தாலும் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. இதிலிருந்து கி. பி. முதலாவது நூற்றாண்டிலேயும் தமிழ் மொழியே தமிழ்நாட்டில் எழுதும் மொழியாக இருந்ததென்பது தமிழின் சிறப்பைக் காண்பிக்கிறது. இக்காலத்தைச் சேர்ந்தவை எனச் சங்க நூல்களில் பலவற்றைக் கூறுவது இங்கே குறிப்பிடத் தக்கது.

கி. பி. மூன்றாவது நான்காவது நூற்றாண்டுகளிலிருந்தே மறுபடியும் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. இவைகளில் பெரும் பான்மையானவை முந்திய பல்லவ அரசர்களால் எழுதிக் கொடுக்கப் பட்ட தாமிரப்பட்டயங்களா

கும். இவற்றில் பிராமியின் வளர்ச்சியடைந்த ஒரு வகை எழுத்து காணப்படுகிறது. முதல் இரு நூறு வருடங்கள் வரை பிராகிருத மொழி, பிறகு வடமொழி. ஆனால், கி. பி. 5-வது நூற்றாண்டைச் சேர்ந்த செஞ்சிக்கடுத்த திருநாதர் குன்று என்ற ஊரிலுள்ள கல்வெட்டு குறிப்பிடத் தக்கதாகும். இதிலுள்ள எழுத்து ஒரு கலப்பெழுத்தாகும். பிராமியும், கி. பி. 8-வது நூற்றாண்டு முதல் தென்பாண்டிய நாடு சேர நாடு ஆகிய பிரதேசங்களில் வழக்கிலிருந்த வட்டெழுத்தின் சில எழுத்துக்களும் கலந்ததாக இருக்கிறது. மொழியோவெனில் தமிழாகத்தான் தெரிகிறது.

கி. பி. 7-வது நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், சாளுக்கியர்கள், விஜயநகர அரசர்கள், முதலியவர்கள் காலத்தைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான கல் வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. தாமிரசாசனங்களும் எண்ணற்றவை கிடைத்திருக்கின்றன. இவற்றின் மூலம் அந்தக் காலத்துச் சமுதாய கலாசார விஷயங்களைப்பற்றிய விவரங்கள் தெரிய வருகின்றன. ஆனால் இதுவரை ஒரு சில ஆயிரக் கல்வெட்டுக்களின் உள்ளடக்கத்தை மட்டும் பிரசுரித்திருக்கிறார்கள், ஏனைய கல்வெட்டுக்களையும் பிரசுரிக்காமல் இருப்பது ஆராய்ச்சிக்கு இடையூறாக இருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும். இக்கல் வெட்டுக்களை ஆராய்ந்ததன் விளைவாகச் சுமார் 40வருடங்களுக்கும் முன் அநேகமாக ஒன்றுமே தெரியாமலிருந்த பல்லவ அரசவம்சத்தினரின் வரலாறு மட்டுமின்றி அவர்கள் இந்நாட்டிற்குச் செய்த கலைத் தொண்டைப் பற்றியும் பல அரிய விஷயங்கள் தெரிய வந்தன. இவ்வரசர்கள் கி. பி. 600 முதல் 850 வரை காஞ்சிபுரத்திலிருந்து தொண்டை மண்டலத்தை ஆண்டுவந்தார்கள்.

இக்கல்வெட்டுக்களிலிருந்து பல்லவர்காலத்தில் பல்லவ கிரந்தம், தமிழ், நாகரி என்ற எழுத்து வகைகளிலும் வடமொழியிலும், கல்வெட்டுக்கள் பெரும்பாலும் எழுதப்பட்டன எனத் தெரிகிறது. இதேகாலத்தைச் சேர்ந்த வெங்கி, பாதாமிச் சாளுக்கியர் இராச்சியங்களில் பழைய தெலுங்கு, கன்னட எழுத்துக்களிலும் வடமொழியிலும், கல்வெட்டுக்கள் பெரும்பாலும் எழுதப்பட்டன என்று தெரிகிறது. இங்கு ஒரு முக்கியமான விஷயம் நினைவுக்குக் கொண்டுவரவேண்டும். அதாவது கடலுக்கப்பாலுள்ள ஜாவா, சுமத்ரா, இந்தோ சீனா போன்ற தேசங்களில் ஒரு சில இடங்களில் இதே காலத்தைச் சேர்ந்த சில கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. இவற்றின் மொழி வடமொழி. எழுத்தோ அநேகமாகப் பல்லவ கிரந்தம் அல்லது வெங்கி எழுத்துப்போன்றிருக்கிறது. இதிலிருந்து தென்னிந்தியர் கடல் கடந்து கலாசாரத்தை மிகப் பழைய காலத்திலே கலை பரப்பினார்கள் என்பது வெளியாகிறது.

சோழ அரசர்கள் காலத்தில் சோழக் கிரந்தம் தமிழ் ஆகிய இவ்வெழுத்துக்களிலும் பெரும்பாலும் தமிழ் மொழியிலும் கல்வெட்டுக்கள் எழுதப்பட்டன. நாகரி எழுத்து ஒரு சில நாணயங்களில் மட்டும் உபயோகிக்கப்பட்டுள்ளது. தென்பாண்டிய நாட்டிலும், சேர நாட்டிலும், வட்டெழுத்து என்ற ஒருவித வளைந்த எழுத்திலும் தமிழ் மொழியிலும் கல்வெட்டுக்கள் எழுதப்பட்டன. பிறகு விஜய நகர அரசர்கள் காலத்தில் அவ்வரசர்களால் எழுதுவிக்கப்பட்ட வடமொழிக் கல்வெட்டுக்கள் நந்தி நாகரி எழுத்திலும் தெலுங்கு கல்வெட்டுக்கள் தெலுங்கு எழுத்திலும் பெரும்பாலும் காணப்படுகின்றன. ஆனால் இவர்களின் பிரதிநிதிகளான நாயக்கர்கள் இருந்த ஊர்களில் பெரும்பாலும் அந்த ஊரின் எழுத்திலும் மொழியிலுமே கல்வெட்டுக்கள் எழுதப்பட்டன. கி. பி. 16-17-வது நூற்றாண்டுகளில் தான் இப்பொழுது பழக்கத்திலிருக்கும் தமிழ், தெலுங்கு கன்னட, மலையாள எழுத்துக்கள் இறுதி வளர்ச்சியடைந்தன.

கட்டடக்கலை : புதைபொருள் ஆராய்ச்சியின் மூலம் தென்னிந்தியாவின் பழங்காலக் கட்டடக் கலையைப் பற்றிய பல அரிய விஷயங்கள் தெரிய வந்திருக்கின்றன. கி. மு. 2வது நூற்றாண்டிலிருந்து கி. பி. 300 வரை பௌத்த ஸ்தூபங்கள் கட்டிவந்தார்கள். இவற்றின் சின்னங்கள் எல்லாம் கிருஷ்ணா நதிக்கரையில் கிடைக்கின்றன. கி. பி. 7-வது நூற்றாண்டு வரையுள்ள காலத்தைச் சேர்ந்த ஏனைய கட்டடங்களின் உதாரணங்கள் கிடைக்கவில்லை. இவைகள் மரத்தாலோ செங்கல் சுண்ணாம்பாலோ, கட்டப்பட்டிருக்கவேண்டும். அவை அழியும் பொருள்கள் ஆனதால் நெடுநாட்கள் நிலைத்திருக்கவில்லை போலும்! ஆனால் சங்க நூல்களில் கோயில்கள் மாளிகைகள் முதலியவற்றைப் பற்றிய அநேக விவரங்கள் கிடைப்பது அக்காலத்தில் கட்டடக்கலை விரிவாக இருந்தது என்பதற்குச் சான்றாகும்.

கி. பி. ஏழாவது நூற்றாண்டிலிருந்து பிற்பட்ட காலத்தைச் சேர்ந்த கட்டடங்களில் முக்காலே அரைக்கால் வீதத்துக்குமேல் கோயில்களாக இருக்கின்றன. கி. பி. 700 வரை மலை

யைக் குடைந்து குகைக் கோயில்கள் செய்யப் பட்டன. சிறு பாறைகளை அப்படியே சிறிய கோயில்களாகவும் செய்தார்கள். உதாரணம் மாமல்லபுரத்து இரதங்களாகும். பிறகு தனிக் கற்களைக் கொண்டு கோயில்கள் கட்டினார்கள். இதற்கு உதாரணம் மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலும், காஞ்சியிலுள்ள கைலாச நாதர் கோயிலும் ஆகும். இக்கோயில்களில் கர்ப்ப கிருஹத்துக்கு மேலுள்ள விமானமே பெரிதாக இருக்கிறது. மதில் ஒன்று மட்டும் இவற்றில் காணலாம். இவ்விதமே கி. பி. 12-வது நூற்றுண்டு வரை கோயில்கள் கட்டப்பட்டன. இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் இவ்வகைக் கோயில்களில் எல்லாம் தலை சிறந்ததாகும்.

பிற்காலச் சோழர் காலத்திலும் விஜயநகர ஆட்சியின் முற்பகுதியிலும், மதில்கள் அதிக மாகவும் அவற்றின் இடையே மண்டபங்கள் கட்டவும் ஆரம்பித்தார்கள். கி. பி. 14 11-வது நூற்றுண்டுகளிலிருந்தே கர்ப்பக்கிருஹத்தின் மேலுள்ள விமானம் சிறியதாகவும், பெரியவை வாகவும் கட்டப்பட்டன கி. பி. 16-17வது நூற்றுண்டுகளில் விஜய நகர அரசர்களாலும் அவர்களின் பிரதிநிதிகளாலும் கோபுரங்கள் வானளாவியனவாகக் கட்டப்பட்டன. உதார ணமாகச் சிதம்பரம், திருவண்ணுமலை, காஞ்சி புரம், மதுரைக் கோபுரங்களைச் சொல்லலாம். இதற்குப் பிற்காலத்தில் முக்கியமான புது வளர்ச்சி இராமேசுவரத்துக் கோயிலிலிருக் கும் மூடிய தூண்கள் நிரம்பிய பிராகாரங்க ளாகும்.

சிற்பக்கலை

இக்கலையின் உதாரணங்களும் கி. மு. 200-வது நூற்றுண்டிலிருந்து கிடைக்கின்றன. இவற்றில் பெரும்பான்மையானவை கி. மு. 200 முதல் கி. பி. 300 வரையுள்ள காலத்தைச் சேர்ந்தவை. இவை கிருஷ்ண நதிக்கரையி லுள்ள அமராவதி நாகார்ச்சுன கொண்டா போன்ற இடங்களில் இருந்த பௌத்த கோயில்களைச் சேர்ந்தவை. தமிழ்நாட்டில் குடி மல்லம் என்ற ஊரில், கி. மு. முதலாவது நூற்றுண்டைச் சேர்ந்த, ஆள் உயரமுள்ள சிவபெருமானின் உருவம் செதுக்கப்பட்டுள்ள சிவலிங்கமே மிகப் பழமையான சிற்பமாகும். வேறு சிற்பங்கள் கிடைக்காவிடிலும், சங்க கால நூல்களிலுள்ள பல வர்ணனைச் சித்த ரிப்புப் போன்றே ஆந்திர நாட்டு மேற் கூறிய சிற்பங்களில் இருப்பது இங்கே குறிப்பிடத் தக்கது. இதிலிருந்து அடிப்படையான விஷ யங்களில் அகிலபாரதமும் ஒரே விதமாகச் சிந்தித்தும் காரியங்கள் செய்தும் வந்திருப்பது தெரியவரும். கி. பி. 7-வது நூற்றுண்டிலி ருந்து சிற்பக்கலையின் உதாரணங்கள் பல கிடைத்திருக்கின்றன. இவற்றில் பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை ஆடையாபரணங்கள் குறைந்தவைகளாகவும், வீரமும் சாந்தியும் உள்ளவைகளாகவும் இருக்கின்றன. சோழர் காலத்தைச் சேர்ந்தவை எழில் நிரம்பியவை களாகவும் கலையின் கூை முழுவதும் பொருந்தி யவைகளாகவும் இருக்கின்றன. பிற்காலத்தில் அதாவது கி. பி. 14-வது 15-வது நூற்றுண் டிலிருந்து இக்கலை கீழ் நோக்கிச் செல்ல ஆரம்பமாயிற்று.

ஓவியக்கலை

சுவரில் வண்ணச் சித்திரம் எழுதுவது என் பது தொன்றுதொட்ட ஒரு பழக்கம் என்ப தைச் சங்கநூல்கள் தெள்ளெனத் தெரிவிக் கின்றன. ஆனல் கி. பி. 7வது நூற்றுண்டு வரையுள்ள காலத்தைச் சேர்ந்த உதாரணங் கள் கிடைக்கவில்லை. கி. பி. 600-வது ஆண் டில் புதுக்கோட்டைக் கருகேயுள்ள சித்தன்ன வாசல் என்ற இடத்திலுள்ள ஒரு சமண சமயக் குகைக்கோயிலில் இருக்கும் சுவரோவி யங்களே தென்னிந்தியாவில் எஞ்சியுள்ள மிகப் பழைய ஓவியங்களாகும். இவற்றின் வேலைப்பாடு மனத்தையும் கண்ணையும் கொள்ளை கொள்ளுமாறு இருக்கிறது. இவற் றில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை, ஒரு தாமரைக்குளமும், இரண்டு நடனப்பெண் மணிகளுமாம். இவைகளைத் தீட்டியிருக்கும் நயமும், பாணியும் தென்னிந்தியாவிற்கே தனிப் பெருமையைக் கொடுக்குமாறு இருக் கின்றன. அக்காலத்திலேயே இக்கலை இவ் வளவு சிறந்து வியப்புறுமாறு இருந்தால் இது எவ்வளவு காலமாகத் தென்னுட்டில் பயிலப் பட்டு வந்திருக்க வேண்டும் என்பதைச் சுலப மாக ஊகித்துக் கொள்ளலாம். இந்த ஓவியங் களுக்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவை காஞ்சிபுரம், பனைமலை முதலிய இடங்களில் இருக்கின்றன. பாண்டிய நாட்டைச் சேர்ந்த திருமலைபுரம் என்கிற கிராமத்திலுள்ள ஒரு குகைக்கோயிலிலும் இவ்வகை ஓவியங்கள் இருக்கின்றன. இதிலிருந்து பாண்டிய நாட் டிலும் இக்கலை சிறப்படைந்திருந்தது தெரிய வரும்.

இக்கலை அதன் வளர்ச்சியின் சிகரத்தை அடைந்தது புகழ்பெற்ற இராஜராஜ சோழன் காலத்தில்தான். சிவபாத சேகரன் என்ற பட் டம் பெற்ற, இந்தச் சக்கரவர்த்திப் பெருமகன் கட்டிய கோவிலான தஞ்சைப் பெருங்கோயி

லின் கர்ப்பக் கிரஹத்தைச் சுற்றிலுமுள்ள ஆளோடியின் இருபுறச்சுவர்களிலும் சொல்லொணுக் கவர்ச்சியும் எழிலும் நிறைந்த சுவரோவியங்களைக் காணலாம், இவை சிவபெருமானின் பல லீலைகளையும் சிவனடியார்கள் சிலரின் கதைகளையும் சித்தரிக்கின்றன. புதைபொருள் ஆராய்ச்சியின் உதவியால் இராஜராஜன் காலத்திய இந்த ஓவியங்களில் ததும்பும் எழில் வீரியம் உயிர் இவ்வகைக் குணங்களுள் பொருந்திய ஓவியங்கள் உலகிலேயே வேறு ஒருசில இடங்களில் மட்டும் காண முடிகிறது என்பது தெரியவருகிறது. இருந்தாலும் இவற்றின் பெரிய பரப்புக்கும் அதிகம் பிரமான தீட்டும் திறனுக்கும் நிகராகச் சுவரோவியங்கள் உலகில் வேறு ஓரிடத்திலும் இருக்கவில்லை என்று கூறலாம். பிற்காலத்தில் லேபாக்ஷி, சோமபள்ளி, சிதம்பரம், ஸ்ரீரங்கம், திருவாரூர், ஹம்பி முதலிய இடங்களிலும் திருவாங்கூரில் பல இடங்களிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டன. இவைகள் காலக்கிரமத்திற்குத் தக்கபடி கீழ்ப்பட்ட தரமாக இருக்கின்றன.

இவ்விதமாகத் தென்னிந்தியாவின் சரித்திரத்தைப் பற்றிய பல விஷயங்களை நிச்சயமாகத் தெரிந்துகொள்ளப் புதைபொருள் ஆராய்ச்சி மிகவும் உதவியாக இருந்து வருகிறது. ஆனுல், இன்னும் பல தெரியவேண்டிய விஷயங்கள் தெரியாமலேயே இருந்து வருகின்றன. முக்கியமாகச் சங்க நூல்களிலும் தேவாரம், திவ்வியப் பிரபந்தங்களிலும் புகழ்பெற்ற காவிரிப்பூம்பட்டினம், சீர்காழி, ஸ்ரீவில்லிப்புத்தூர் போன்ற பல இடங்களைப் பற்றிய விஷயங்கள் ஒன்றுமே தெரியவில்லை. சென்ற 1955-ம் வரிடம் டிசம்பர்மாதம் அண்ணுமலை நகரில் நடைபெற்ற **அகில இந்தியக் கீழ்க்கலை மகா நாட்டில்** இக்குறை பாட்டைப் பகிரங்கமாகச் சர்க்கார், கலாசாலை, மற்றும் புலவர்களின் முன்பு கொண்டு வந்து, இக்குறையைத் தவிர்க்குமாறு புதைபொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் மத்திய சர்க்கார் புதைபொருள் இலாக்காவில் காவிரிப்பூம் பட்டினத்தைச் சுற்றியுள்ள இடம் நன்ருகச் சோதனை செய்யப்பட்டதாகத் தெரிகிறது. அதே இலாக்காவால் சேக்கிழார் பெருமான் பிறந்த இடமான குன்றத்தூரில் பழங்காலக் குடியிருப்புகளிருந்த இடங்கள் தோண்டப்பட்டு வருகின்றன. இவ்விதப் புதிய ஏற்பாடுகளால் தென்னிந்தியாவின் பண்டைச் சிறப்பின் சின்னங்கள் அதிகமாகக் கிடைத்து இந்தப் பிரதேசத்தின் சரித்திரத்தையும் முக்கிய குணங்களையும் ஆதார பூர்வமாக நிலைநாட்ட முடியும் எனத் தோன்றுகிறது. இவ்வித முயற்சிகளுக்குப் பொருளும், போதிய பயிற்சி பெற்ற வேலையாட்களும் வேண்டும். பணம் சர்க்காரிடமிருந்து பெறலாம். வேலை தெரிந்தவர்கள் வேண்டியதற்கு இந்நாட்டுக் கலாசாலைகள் புதைபொருள் இலாக்காக்களை ஆரம்பித்துப் புத்தி சாலித்தனமும், ஊக்கமும், பட்சபாதமின்றி ஆராய்ச்சி செய்யும் புலமையும் வாய்ந்தவர்களாக இளைஞர்களைப் பயிற்சி செய்ய வேண்டியது அவசியம். முன்னரே வெளிப்படுத்தப்பட்ட பண்டைப் பொருள்கள், கட்டடங்கள் போன்ற சின்னங்களைப் பாதுகாக்கவும் இனிக்கண்டுபிடிக்கும் சின்னங்களைப் பராமரிக்கவும் ஒரு பொறுப்புவாய்ந்த இலாக்காவை அரசாங்கம் ஏற்படுத்துவது அவசியமான தாகும்.

★

அடிப்பட்ட காயங்களுடன் போலீஸ் **நிலையத்திற்குள் நுழைந்த** ஒரு பெண் நேராக ஹெட்கான்ஸ்டபிளிடம் வந்து ஒரு மனிதரைப் பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டு, அவர் தன்னை தலைமயிரைப் பிடித்துக் கீழே தள்ளி நன்ருக அடித்து விட்டு ஓடி விட்டதாகக் கூறினுள்.

அதைக்கேட்ட ஹெட்கான்ஸ்டபிள், " சரி! இன்றைக்கு ஒரு கேஸ் கிடைத்துவிட்டது நீங்க ஒரு ரிப்போர்ட்டில் கையெழுத்து போட்டுவிட்டுப் போங்கம்மா! அந்தப் பயலைக் கண்டு பிடித்துக் கம்பி எண்ண வைத்துவிடுகிறேன் நான்! " என்ருர் மீசையை முறுக்கி விட்டபடி.

" வேண்டாம்! அவரைக் கண்டு பிடித்து என்னிடம் அனுப்பிவிட்டால் போதும்! அவர் என்னைக் கல்யாணம் செய்துகொள்வதாக சத்தியம் செய்துகொடுத்திருக்கிருர்! "

செல்லவிடாயோ !

(எ ழி னி)

★

''ஏடி ! அதோ அவர் வந்துவிட்டாரடி !''

''எங்கடி! தோழி !''

''அதோபார் ! தென்னஞ்சோலைக்கு அருகேயுள்ள சாலையின் வழியாகக் குதிரையின்மேல் விரைவாக வருவதைப்பார் !''

''அது அவரல்லடி !''

''வெண் புள்ளி பரந்த கருநிறக் குதிரையைப் பார் ! அது நம்மை நோக்கியே விரைந்து வருகிறது. அருகில் தெரிந்தும் அதன் நிறங்கூடவா உனக்கு மறந்துபோய்விட்டது ! இப்பொழுது பார் ! பாரடி ! அவரல்லாமல் வேறு யாரது !''

''ஆமாம் ! அவரே போல்தான் தோன்றுகிறது ! நான் உள்ளே போய்விடுகிறேன். அவர் வந்தால் உள்ளே வரவொட்டாமல் தடுத்துவிடு ! எங்கே பார்க்கலாம் !'' என்று தோழியிடம் கூறிவிட்டுத் தலைவி வீட்டிற்குள் ஓடி வடுகிறுள்.

முறைத்துப் பார்க்கும் முகத்துடன் தோழி வாயிலில் நின்றுகொண்டிருக்கிறுள். வீட்டின் முன்புறத்தில், ஏறுகுதிரையைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டுக் கையில் பெட்டகம் ஒன்றை ஏந்திக்கொண்டு, புன்முறுவல் பூத்த முகப் பொலிவோடு வீட்டிற்குள் நுழைய விரைவாக வருகிறுன் தலைவன். தோழி வழி மறுத்து நிற்கிறுள்.

''என்மேல் கோபமா ?'' என்று கேட்டுக் கொண்டே, அவள் கன்னத்தை விளையாட்டு முறையில் புன்சிரிப்போடு கிள்ளி விட்டுவிட்டு உள்ளே செல்ல முனைகிறுன். ''வெகுண்டு காட்டும் முறையில், கையை நீட்டித் தடுத்துநின்று முகத்தைச் சுளித்துக்கொண்டு, ''உள்ளே போகக் கூடாது'' என்று கூறி அவனை மேற் சொல்லவொட்டமல் தடைசெய்கிறுள் தோழி.

''ஏன் ?''

''போகக்கூடாது என்றுல் போகக்கூடாது தான் !''

''உத்திரவு கடுமையானதாக இருக்கிறதே !''.

''கடுமையானது மட்டுமல்ல, கண்டிப்பானது !'' என்று கூறுகிறுள்.

''காரணம் ?''

''காரணமா ? ஐயோ பாவம் ! ஒன்றுந் தெரியாத பச்சைக் குழந்தை ! காரணந் தெரியவில்லை !''

''என்மேல் என்ன குற்றம் !'' என்று கேட்டுத் திகைப்புடன் நிற்கிறுன் தலைவன்.

''உங்கள்மேல் ஒன்றுங் குற்றமில்லை ! ஏனென்றுல், நீங்கள் குற்றமே புரியாத குணசீலன் பாருங்க !''

''அவளைக்காண என் உள்ளந் துடித்துக் கொண்டிருக்கிறது, தோழி ! சற்று, அவளைக் காண இடங்கொடு !''

''இப்பொழுது தான் துடிக்கிறதா ? இத்துணை நாளும் அந்த உள்ளம் எங்கே போயிற்று !''

''கோபங் கொள்ளாதே ! நான் விரைவில் வந்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றது உண்மைதான். சென்ற விடத்தில் தள்ளமுடியாத வேலை வந்து விட்டது. ஆகவே காலஞ் சிறிது தாழ்த்தி வரும்படி நேர்ந்தது. பெண்களுக்கு இரக்கம் உண்டு என்பார்களே ! சற்று, என்னை மன்னித்துவிடு தோழி......!''

''மன்னிப்பு ! செய்வதெல்லாஞ் செய்தான பிறகு மன்னிப்பா ! முடியாது ! ஒருக்காலும் முடியாது !''

''வெந்த புண்ணில் வேலை நுழைக்காதே, தோழி ! அவளை ஒரு முறை பார்த்துவிட்டால் போதும். அதுவே என் மனதிற்கு இன்பமளிக்கக் கூடியது !''

''அவள் உங்களைப் பார்க்க இப்போது விரும்பவில்லை !''

"அப்படிச் சொல்லாதே! அவள் பண்பை நான் நன்கு அறிவேன். என் நீண்டநாள் பிரிவு குறித்து, அவள் வருந்தி வாடியிருப்பாள் என்பதை உணர்கிறேன். அவள் என் மீது வசைமாறி பொழியக் 'காத்துக் கிடப்பாள் என்பதையும் அறிகிறேன். ஆனால் அவள் சேர்த்து வைத்திருக்கும் வசை மேகங்களெல்லாம் என்னைக் கண்டதும் பறந்து போகும் என்பது எனக்குத் தெரியும். ஆகவே என்னைத் தடுக்காதே!"

"தலைவி, உங்கள்மீது வெறுப்புற்றிருக்கிருள். இப்பொழுது அவளைப் பார்த்தல் முடியாத காரியம். சென்றுவிட்டுப் பிறகு வாருங்கள்! அதற்குள் அவள் சினந் தவிர்ந்திருப்பாள்!"

தோழியின் கூற்றுக் கேட்டுத் திகைத்த தலைவன், மனங் கலங்குகிருன். தோழியை மீறித் தலைவியை யடைதலும் இயலாது. அப்படிச் செய்யின் அவன்தன் பண்பிற்குப் பங்கம் ஏற்பட்டு விடும். எப்படியும் தோழியின் வாயிலாகத்தான் காதலன் தன் காதலியை அடையவேண்டும். முன்பு நிகழ்ந்ததொரு நிகழ்ச்சியைத் தோழியிடத்தில் தெரிவித்தால், அவள் தன் நிலையையும், தன் தலைவியின் நிலையையுங் கண்டு வழிவிடுவாள் என்று கருதி, தோழியிடத்தில் அந்நிகழ்ச்சியை விளக்கிக் கூற எண்ணங் கொள்கிருன் அவன்.

"முன்பொரு பொழுது எங்கள் திருமணம் நிறைவேறிற்றே அது உனக்கு நினைவிருக்கிறதா!"

"நினைவிருக்கிறதோ—இல்லையோ, அதற்கென்ன இப்பொழுது?"

"அப்போது எவ்வளவு அழகான பந்தல் போட்டிருந்தார்கள் பார்த்தாயா! பந்தலுக்கு வரிசை வரிசையாகக் கால்கள், கீழே வெண் மணற் பரப்பு. பந்தலின் ஓரங்களிலெல்லாம் தொங்கவிடப்பட்ட மாலைகள். வீடு முழுவதும் விளக்கொளி உணவுச்சாலையில் ஓய்தல் ஒழிதலில்லாமல் ஒரே இரைச்சல். உழுத்தம் பருப்புப் போடப்பட்ட, நன்ருகக் குழைந்த பொங்கல். அதனை ஓயாமல் உண்டு களிக்கும் உறவினர். இவையெல்லாம் எவ்வளவு நன்ருக இருந்தது!"

"அதை ஏன் என்னிடத்தில் இப்பொழுது புகல்கிறீர்கள்! எல்லாம் எனக்குத் தெரிந்தது தான்! உங்கள் திருமணத்தை நீங்களே புகழ்ந்துகொள்ள வேண்டாம்."

"அதுவும் அந்த நாள்-என் திருமண நாள் இருக்கிறதே, அது, மழை முதலிய இடையூறுகள் ஏற்படாத நல்ல நாளாக முன் கூட்டியே வைக்கப்பட்டதாகும். அந்த நாள் எப்பொழுது வரும், எப்பொழுது வரும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு, இருள் நீங்கிக் காலைப் பொழுது மலர்ந்ததும், எப்படியிருந்தது தெரியுமா-மகிழ்ச்சி வெள்ளம் கங்கு கரையின்றி ஓடிற்று!"

"அதெல்லாம் இப்பொழுது உங்களை யார் கேட்டது?"

"உனக்கேதான் சொல்லுகிறேன்! கேள்! திருமணஞ் செய்து வைக்க வந்த பெண்டிர்கள், அம்மம்மா! எவ்வளவு இரைச்சல் போட்டார்கள் பார்த்தாயா! அவர்கள் தம் குடங்களைத் தலையிலே சுமந்து கொண்டு, மண்டைகளைக் கையிலே ஏந்திச் சென்று, நான் காதலித்த அவளை—உன் தோழியை நீராட்ட வேண்டி, நன்னீர் கொண்டுவந்து ஒரு பால் குவித்துக்கொண்டேயிருந்தார்கள் - மக்களைப் பெற்றெடுத்த மகளிர் நால்வர் கூடி, நீராட்டுவதற்கு முன்னவும், பின்னவும் பெற வேண்டுவன வற்றை முறை முறையாகப் பெற்று, அவளை நீராட்டினுர்கள். அந்த நீரில் கலந்திருந்த நறுமணப் பொடிகளும், நெல்லும் அவளுடைய கரிய கூந்தலில் ஒட்டிக்கொண்டன. அப்படி நீராட்டும்போது, 'கற்பினின்றும் என்றும் தவருது, பெறத்தக்க பல்வகைப் பேறுகளையும் பேற்று, உன்னையேற்றுக்கொண்ட காதலனை விரும்பிப் பாதுகாக்கும் பெரு விருப்புடையவளாய் நீ வாழ்வாயாக!' என்று வாழ்த்திஞர்கள். அந்த ஒலி இன்னமும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது...!"

"என் காதில் கூடத்தான் ஒலித்துக் கொண்டிருக்கிறது......"

"அவசரப்படாதே! கேள்! நீராட்டிய பிறகு, என் கண்ணன்ன அக்காதற் கிழத்தியை, மண வறையில், என்னேடு சேர்ந்து உட்கார வைத்துப் 'பெரியதொரு இல்லக் கிழத்தியாக நீ ஆவாய்!' என்று சுற்றத்தாரெல்லாம் வாழ்த்தொலி கூறிப் பேரொலியை எழுப்பிக் கொண்டிருந்தார்கள்......"

"இதெல்லாந்தான் தெரிந்த கதையாயிற்றே! ஏன் திரும்பத் திரும்ப என்னிடத்தில் கூறுகிறீர்கள்?"

"தோழி! இதுவரையில் கூறியதுதான் உனக்குத் தெரிந்த கதை! இனிமேல் சொல்லப்போவது உனக்குத் தெரியாதகதை! அதை மட்டும் சற்றுக்கேள்! நான் என்

னவோ பிதற்றுகிறேன் என்று எண்ணுகிருய்! அல்லவா? நான் உன் தலைவியிடத்தில் கொண்டிருக்கும் மறவா அன்பும், அவள் என்னிடத்தில் கொண்டிருக்கும் நீங்கா அருளும்தாம் என்னை இவ்வாறெல்லாம் கூறச் செய்கின்றன......"

"என்னவோ எனக்குத் தெரியாத கதை ஒன்று சொல்லப்போகிறேன் என்று சொன்னீர்களே? அதுதானு இது..."

"சொல்லுகிறேன்! சற்றுப்பொறு! நான் சொல்லப்போவது கதையல்ல. என் உள்ளத்தில் என்றும் ஊசலாடிக்கொண்டிருக்குமொரு காட்சி—உண்மைக் காட்சி—நான் மட்டுமே கண்ட காட்சி! எங்கள் திருமணம் நடந்த அன்றிரவு, நான் என் காதலன்பைத் தனியே கூடுவதற்குரிய அறையில் நுழைந்தேன். அவள் தான் உடுத்தியிருந்த புதிய புடவையால் தன்முகத்தை மூடிக்கொண்டு, முதுகுப்புறம் வளைந்து காணப்பட, கவிழ்ந்து படுத்துக்கொண்டிருந்தாள். அவளை அணையும் விருப்போடு அருகே சென்ற நான், அவள் முகத்தினை மூடியிருந்த ஆடையினை மெதுவாக நீக்கினேன். நீக்கவே, அஞ்சி, மூச்செறிந்து, திடுக்கிட்டு அவள் எழுந்தாள். எழுந்த ஞான்று திகைப்புற்ற நான், நீ அச்சமுறக் காரணம் யாது? கண்ணே! உன் உள்ளத்திலிருப்பதை ஒளியாது உரை!" என்று வினவினேன். தலையை நிமிர்ந்து என்னை ஒருமுறை பார்த்து, புன்சிரிப்பை என்மீது வீசிவிட்டுத் தலையை உடனே தாழ்த்தி நாணமடைந்தவள் போல் நின்ருள். அப்படி அவள் நின்ற நிலை, இன்னமும் என் உள்ளக் கண்முன் காட்சியளிக்கிறது. மாந்தளிர் போன்ற மேனி—மடப்பமும் செருக்கும் நிறைந்த மான் விழி போன்ற கண்கள்—குளிர்ச்சி பயக்கும் பின்னலுடைய கூந்தல்—சிவந்த மணிகள் பதித்து, ஒளியுமிழும் குழைகள் அசைந்தாடிக்கொண்டிருக்கும் காதுகள்.. இத்தகைய தன்மைகளோடு அகமகிழ்ச்சியை முகத்தில் தேக்கி நின்ற அவளது அந்த நிலையை நீ அறியமாட்டாய், தோழி! அத்தகைய அன்பின் பெருக்கைத் தழுவ துடிதுடித்துக் கொண்டிருக்கும் என் உள்ளத்திற்குத் தடை விதிக்காதே! சற்றே **செல்லவிடு! தோழி!**' என்று தலைவன் கூறக்கேட்ட தோழி, மறுமொழி கூருது நிற்கிருள்.

தலைவியிடத்தில் தலைவன் கொண்டிருக்கும் அன்பின் திறத்தை அறிந்த அவள், தலைவன் குற்றமற்றவன் என்றறிகிருள். தலைவனின் அன்புணர்ச்சிக்கு மேலும் அணைபோட்டு வேடிக்கை பார்க்கக் கருதாத தோழி, பேசாமல் நிற்கிருள். தலைவன் தலைவியைச்சேர்கிருன். பிறகு இன்பம் கொள்ளை! கொள்ளை! கொள்ளை!!!

உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின் பெரு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொது செய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறை முறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க

வதுவை நன்மணங் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி யாகெனத் தமர்தர
ஓரிற் கூடிய உடன்புணர் கங்குல்
கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்
தொடுங்கினள் கிடந்த ஓர்புறந் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம் புதை திறப்ப
அஞ்சினள் உயிர்த்தகாலை யாழநின்
நெஞ்சம் படர்ந்த தெஞ்சா துரையென
இன்னகை இருக்கைப் பின்யான் வினவலின்
செஞ்சூட்டொண்குழை வன்காது துயல்வர
அகமலி உவகையள் ஆகி முகனிகுத்
தொய்யென இறைஞ்சி யோளே மாவின்
மடங்கொள் மதைஇய நோக்கின்
ஒடுங்கீர் ஓதி மாஅ யோளே.

இந்தக் காதற் காட்சியைத் தீட்டிக் காட்டியவர் நல்லாவூர் கிழார் என்னும் புலவர். மேலே எடுத்துக் காட்டியது அக நானூறு 86-ம் பாடல்

காதலியை விட்டுப் பிரிந்த காதலன், சில நாட்கள் கழித்துக் காதலியைச் சேர வரும் போது, அவன் குறிப்பிட்ட காலங் கழித்து வருவது கண்டு அவனிடம் தமது வெறுப்பைக் காட்ட எண்ணிய தோழி, அவனைத் தடுத்து நிற்க, காதலன் அவளுக்குத் தெளிவு மொழி கூறித் தேற்றுவதுபோல் புலவர் இப் பாடலை ஆக்கியிருக்கிறார்.

இந்தப் பாடலின் மூலமாகப் பண்டைத் தமிழகத்தில் திருமணம் எப்படி நடந்தேறியது என்பது ஒருவாறு விளக்கமுறுகிறது. அக் காலத்தில் ஒருவனும், ஒருத்தியும் யாருக்குந் தெரியாமல் தய்யுகளுக்குள் காலைப் பரிமாறிக் கொள்ளும் களவொழுக்க முறையை மேற்கொண்டிருந்தார்களென்பதும், அப்படி இருவரும் காதலித்திருப்பதைப் பெற்றோர், சுற்றத்தாரும் அறிந்து, திருமணம் முடித்து, இல்லற வாழ்வில் அவ் விருவரையும் இறுத்துவார்கள் என்பதும் மேற்காட்டியுள்ள அழகிய பாடலால் நன்கு விளங்குகின்றன. திருமணம் நடந்தேறிய அன்றிரவு, காதலன் தன் காதலியை அறையில் நெருங்க வரும்போது ஒருவித அச்சந் தோன்றி, அடுத்த வினாடியே அவ் வச்சம் மறைந்து அக மகிழ்வு ஏற்படும் நிலை, அவ்விருவரும் திருமணத்திற்கு முன்பு களவு முறையில் காதல் விளையாட்டுக்கள் புரிந்து வந்திருக்கின்றனர் என்பது தெளிவாகிறது. அதனால் தான் "உன் உள்ளத்தில் தோனறுவதை ஒளியாமல் உரை" என்னும் கருத்துப்பட, "நின் நெஞ்சம் படர்ந்தது எஞ்சாதுரை" என்று தலைமகன் வினவுகிறான். அவளும் புன் சிரிப்பை அவன் மீது தெளித்துவிட்டுத் திரும்புவாள் போல் "அகமலி வுவகையள் ஆகி முகனிகுத் தொய்யென இறைஞ்சு"கிறாள்.

இந்தப் பாடல் தீட்டிக் காட்டப்படுங் காலம் ஏறத்தாழ ஈராயிர மாண்டுகளிருக்கும். அக் காலத் திருமணத்தில் அய்யர் இல்லை; அரசாணிப் பானையில்லை; அரசங்குச்சி, ஆலங்குச்சிப் போட்டு அனல் எழுப்புவதில்லை; அம்மி மிதித்து அருந்ததி காட்டுவதில்லை; அய்யர் காலில் வீழ்ந்து காசு கொடுப்பதில்லை; தாலி கட்டுவதில்லை; மந்திர தந்திரங் கொள்வதில்லை; புகைவளர்ப்பதில்லை; புரியாதமொழி செப்புவதில்லை!

பந்தல்; புதுமணற் பரப்பு; எங்கும் அலங்கரிப்பு; சுற்றத்தார்க்கு விருந்து; "கொண்ட காதலனுக்கு ஏற்ற துணைவியாக ஆவாய்" என்று மணமகளைப் பிள்ளைபெற்ற பெண்டிர் வாழ்த்துதல்; மணமகளை நன்னீரால் நீராட்டு

தல்; "பெரிய தொரு இல்லக் கிழத்தியாக நீ ஆவாய்" என்று சுற்றத்தார் வாழ்த்துதல்; மணமக்கள் அன்றிரவு தனியே சந்தித்தல்; இந்த அளவில் திருமணம் நடந்தேறிவந்திருப்பது, அக்கால மக்களின் அறிவுத் திறத்தையும், காதல்மேம்பாட்டையும், நாகரிக வளர்ச்சியையும் நன்கு விளக்குவதாகிறது.

தமிழர் நாகரிகத்திற்கு முற்றிலும் புறம்பான ஆரிய நாகரிகப் படையெடுப்பிற்குப் பின் திருமண முறை மாறிற்று; கண்மூடிக் கட்டுப்பாடு வளர்ந்தது; குருட்டுப்பழக்கம் பரவிற்று; காதல் வாழ்வு மறைந்தது; அமைதியற்ற இல்லற வாழ்வே எங்ஙனும் காட்சியளித்தது; இன்றும் அளிக்கிறது. இந்த நிலைமாற வேண்டும்.

வாழ்விலே திருமணம் ஒருகட்டம்-முக்கியமான கட்டம். காலத்திற்கேற்ற கருத்தின் துணைகொண்டு அக்கட்டத்தில் நடமாட எதிர்காலத்தவர் முற்படவேண்டும். அந்நிலை ஏற்பட்டால் ஒவ்வொருவரின் இதயத்திலும் ஏற்படும் இன்பகீதம், நாட்டின் நல்ல கீதமாக மாறும்!

தோற்றமும் திறமையும்

★

நெப்போலியன் - ஐரோப்பியா முழுவதும் அவன் காலடியில் கிடந்த சமயம். ஒருநாள் அவனைச் சந்திக்க இளைஞன் ஒருவன் வந்தான். அழுக்கு உடையில் அலங்கோலமான தோற்றத்தை அளித்த இளைஞனைக் கண்டதும் அதிகாரிகள் ஒதுங்கினர். இளைஞன் விரும்பியபடி வேலையில் ஈடுபட்டிருந்த நெப்போலியனிடம் அழைத்துச் செல்லப்பட்டான். அவனுக்குச் சரியான வரவேற்பு கிடைக்கவில்லை.

ஓவியத்துறையில் ஈடுபட்டிருப்பதாக அந்த இளைஞன் கொண்டுவந்த அறிமுகக் கடிதம் கூறியது. நெப்போலியன் கலைகளில் ஆர்வமுள்ளவன். இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். கடைசியில் இளைஞன் விடைபெற்றுக்கொண்டு எழுந்தான். நெப்போலியனும் எழுந்தான்! மன்னர் மன்னர்கள் அவனிடம் விடை பெற்றுக்கொள்ளும் பொழுதுகூட அவன் எழுந்ததில்லை. எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். மரியாதையுடன் வழியனுப்பும் வகையில் இளைஞன்கூட வாயில்வரை வழிநடந்து வந்தான். இளைஞனுக்கே ஆச்சரியம் வந்தது. நெப்போலியன் புன்முறுவல் செய்து வரும்பொழுது அலங்கோலமான வெளித் தோற்றம்தான் அறிமுகஞ் செய்தது. பேசிக்கொண்டிருக்கும்பொழுது இளைஞனின் ஆழ்ந்த அறிவு, திறமை, உயர்ந்த குணம், பண்பட்ட உள்ளம் இவைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டேன் வெளித் தோற்றத்துக்குத் தக்க வரவேற்பு கொடுக்கப்பட்டது, ஆனால் போகும்பொழுது அவனுடைய திறமைக்குத் தக்கவாறு விடைபெற்றுக்கொண்டேன்." என்று சொன்னான்.

ஓவியன் உள்ளம்

[நம்பி]

அலகால் பொருக்கி, அமைவாக உண்டு, அண்மையோ சேய்மையோ அலைந்து திரிந்து, இரைதேடிக் கொள்ள அறியாத பறக்கறியாப் பறவை - சிறு குஞ்சு அங்கே நின்று அகவிக் கொண்டிருந்தது.

அதைவிட வேறு விளக்க இயலாது அந்தச் சிறுவனின் நிலையை. தாத்தா தாத்தா என்று கூவிக்கொண்டே சுற்றுமுற்றும் பார்த்து ஓடிக்கொண்டிருந்தான். குரல் படிப்படியாகக் குறைந்து அழுகையாக மாறியது. எதிர்ப்படுவோரிடமெல்லாம் "என் தாத்தா எங்கே" என்று கேட்டுக்கொண்டிருந்தான். 'அவர்கள் அறிவார்கள்' என்பது அவனுடைய எண்ணம். அவர்கள் ஏதும் அறியார்கள். அவன் தாத்தா என்ன உலகறிந்த ஒரு மனிதனா! கண்டவர் கருதி அவன் செல்லும் வழிவகைகள் அறிந்திருக்க. அவனொரு நாடோடி, அதிலும் ஏற்றுண்ணும் நிலையில் யாதுமற்று அலையும் தன்மையினன். அவனுக்குச் சிறுவனும் சிறுவனுக்கு அவனுந்தான் ஆதாரம். அவனை-தன் துணையைக் காணாமையால்தான் துடித்தது அந்தத் துள்ளுமறிப் பருவத்துச் சிறுவனின் உள்ளம். யாரோ ஒரு சிலர் அவன்மீது இரக்கப்பட்டு உன் தாத்தாவை "அரசாங்கத்தார் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள்" என்று கூறினார்கள். நேரே அரண்மனைக்குப் போ என்று வழிகாட்டினார்கள். ஓடினான் அங்கே. நினைத்தவுடன் அரண்மனை நுழைவு கிடைத்து விடுமா என்ன. காவலர் தடுத்தனர். அவர்களைக் கண்டு அஞ்சியவாறே நின்று அழுது புலம்பிக்கொண்டிருந்தான். அவன் உள்ளம் உள்ளே நடைபெறுவதை அறிய உன்னிற்று. எவ்வாறு இயலும். எனவே சற்றுத் தொலைவில் சென்று ஓய்ந்து படுத்துவிட்டான். அவன் உள்ளத்தை உணர்ந்த ஒரு சிலர் அவனது நிலைக்கு இரங்கினர். எனினும் யாது செய்ய இயலும். அலுவல் அரண்மனையிலென்றாலும் அவர் தம் ஆளுகை அடுத்தவர் கையிலல்லவா இருக்கிறது. எனவே பெருமூச்செறிவதுடன் பேசாப் பதுமைகளாய் விட்டனர். அரசவை நிகழ்ச்சி தொடங்கும் நேரம். ஆயத்தார்கள் வருகைக்கு வணங்கி வழி தந்து நின்றனர் காவலர். சென்றவர் இருக்க அவை நிறைவுற்று, நிகழ்ச்சி தொடங்கிற்று.

மன்னன் வந்தமர்ந்தான். வழக்கப்படியுள்ள முதலாய்வு நிகழ்ச்சிகள் முடிவுற்ற பின்னர், ஏனைய தேவை முதலியன விசாரிக்கப்பட்டுத் தகுவன தரப்பட்டது இரண்டாம் கூறு முடிவுற்றது. அடுத்து, புலமைத் தேர்வு முதலியனவும், புலனாய்வு தேர்வுத் திறமை காணல் போல்வனவும் நிறைவேற்றிய பின்னர், குற்றங்கடிதல் நிலைவந்தது. அப்போது, திரையிட்டு மறைக்கப்பட்ட தன்மையில் குற்றவாளியெனக் கூறப்பட்டவனின் குற்றம் பற்றிய விளக்கம் கூறப்பட்டது. அதில் "குற்றவாளி ஒரு ஓவியனென்றும், அவன் மன்னரின் உருவத்தை வீதிகளில் தீட்டி பிறர் அதனை மிதித்துச் செல்லுகின்றவகையில் செயலாற்றி, அரசுக்கு அவமதிப்பை ஏற்படுத்தினனென்றும், மன்னரை இழிவுக்குட்படுத்தும் செயலில் ஈடுபட்டிருக்கும் அவன் பிறநாட்டவனாக இருக்கக் கூடுமோ என்ற அய்யப்பாட்டினாலும், அவன் செய்த குற்றம் மன்னிக்க இயலாத் தன்மையானதினாலும் கைது செய்யப்பட்டிருக்கிறான்" என்று விளக்கப்பட்டது. மன்னர் நேரடி விசாரணை நிகழ்த்தினார் :

"ஓவியரே! இக்குற்றச்சாட்டுகள் உண்மையல்ல என்று உம்மால் மறுக்க இயலுமா?"

"நிச்சயமாக மறுக்கிறேன் மன்னா! நான் இதுவரை தங்கள் திருவுருவைக் காணும் பேறு பெற்றேனில்லை. அத்தகைய ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்ததுமில்லை. தற்போதும் தங்களெதிர்வரும் தன்மையற்று, திரையின் பின்னர் இருத்தப்பட்டிருக்கிறேன். ஒன்றுமட்டும் என்னால் கூறமுடியும்; நான் வரைவது இயற்கையின் அமைப்புகள் இன்னின்னவாறு இருந்தால் அவ்வுருவம் இன்ன வகையில் இருக்கும் என்பதையே! அத்தகைய என் அறிவுக் குறிப்பினால் வரையப்பட்ட ஒரு உருவம் தங்கள் உருப்போன்று இருந்தது என்றால் இயற்கைகள் ஒருங்கே

அமைவுற்றது உங்கள் வடிவம் என்று கொண்டு பெருமைப்படுகிறேன். அத்தகைய உருவத்தை நேரே காணும்வண்ணம் அவை நடுவே வந்தும் காண இயலாதவனாகத் திரையிடப்பட்டு மறைக்கப்பட்டிருக்கும் என் நிலைக்கு வருந்துகிறேன்."

"அப்படியா! உம் நுணுக்க அறிவையுந் திறனையும் மெச்சுகிறேன். பாராட்டுகிறேன். உருவக்குறையுடையோரென்ற காரணத்தால் உமக்கு இடப்பட்டிருக்கும் திரையை, கலை நிறைவுடையோரைக் காண்பதும் இனிதென்ற காரணத்தால் நீக்கச் செய்கிறேன்."

என்றதும் திரை நீக்கப்பட்டது. ஓவியன் அரசன் உருவை நேரே கண்டு மகிழ்ந்தான்.

"ஓவியரே! உமது கண்கள் என்னைக் காணட்டும். உமது கருத்து என் வடிவை அளந்து கொள்ளட்டும். கண்ணும் கருத்தும் கொண்டவற்றைக் கை ஓவியமாக வரைந்து காட்டட்டும். அதை என் கண்கள் கண்டு களிக்கட்டும்."

"மன்னா! ஓவியனின் உள்ளம் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியதல்ல. கண்கண்டு, கருத்துக்கொண்டால்மட்டும் அவன் சிந்தை எழுச்சியுறுவதில்லை. சிந்தை எழாதவரையில் அவன் செயல் நடைபெறுவதில்லை!

"ஓவியரே! உம் போன்ற உயர்தன்மையுடைய ஒருவரால் என் உருவம் தீட்டப்படுவதையே நான் விரும்புகிறேன். உம்போன்றார் ஒருவரையே நான் தேடிக்கொண்டிருந்தேன். தற்போது தம்மைக் காண நேர்ந்தது என் பெரும் பயனெனவே கொள்கிறேன். ஆகட்டும்! வரையத் தொடங்கும். உமக்கு வேண்டியனயாவும் வகைவகையாகத் தர ஏற்பாடு செய்கிறேன்."

என்று கூறியவண்ணம், அவையை நிறைவாக்கி, ஆலோசனைக் கூடம் நாடி ஏகினான் மன்னன். அங்கே ஓவியருக்காக வேண்டிய கருவிகளும், கலவைவகைகளுக்குரிய பொருள்களும் வைக்கப்பட்டிருந்தன. ஏவலர் இருந்தனர் இயம்பியன செய்ய. என்றாலும் ஓவியத்திற்கான தொடக்கம் செய்யப்படவில்லை! மன்னன் மிகுந்த ஆவலுடன் வந்தான். அங்கே கவலையே நிலையான ஓவியர் ஓர் புறத்தில் ஒய்ந்து உட்கார்ந்திருந்தார். அரசன் வந்து அவரை அணுகினான். அரசன் வந்திருப்பதறிந்த அவர்;

"வணக்கம் மன்னா! தங்கள் வருகையையே எதிர்பார்த்திருக்கிறேன். நான் செல்ல விடைதர வேண்டுகின்றேன்."

"சித்திரத்தை வரைந்து முடித்துவிட்டீரா! ஏதோ பார்ப்போம்."

"வேந்தே! கலைஞனின் உள்ளம் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி விடுவதில்லை! அவன் மனம்போன போக்கிலிருந்து, நிறைந்தசிந்தை ஏற்பட்டு அதன் பயனாகக் கிடைக்கும் கலைப் பயனே சிறப்புற விளங்கும். தாங்கள் என்ன தான் என்னை வற்புறுத்தினாலும், இந்தச் சூழலில் என் கலை இயங்க இயலாது"

"எத்தகைய சூழ்நிலைகளையாயினும் இங்கேயே ஏற்படுத்தித் தருகிறேன். என்ன வேண்டுமென்கிறீர். காவும் கழனியும், வாவியும்சாலையும், சோலையும் பூங்காவும், நீர்நிலையும் ஆற்றின் வளத்தையும் அலை கடலின் தன்மைகளையும் அமைத்துத் தரவேண்டுமா? செய்குன்றும்புனைநகரும் வேண்டுமாயினும் அங்ஙனமே அமைத்துத்தரக் காத்திருக்கிறேன். ஆக உமது கையால் என் உருவம் தீட்டப்பட வேண்டும். அதுவே என் ஆவல். அதை என் பேறாகவே கருதுவேன்."

"நானும் அதை என் பெரும்பயனாகவே கருதுவேன். ஆனால் தற்போது கட்டளையில் என் மனம் செயல்படவில்லை"

"கட்டளையல்லவே! என் அன்பு வேண்டுகோளல்லவா விடுத்துள்ளேன். எந்தக் கலையும் அதன் மேம்பட்ட திறத்தவர்களினால் செய்யப்படும்போது, உயர்வாக மட்டுமல்ல புகழுக்கு உரியதாகவும் அமைகிறது. ஆகவே தான் தமது கைவண்ணத்தில் என் உருவம் அமைக்கப்பட வேண்டுமென்று அவாவுகிறேன். ஆதலின் விரைந்து முடித்து என் உள்ளத்துடிப்புக்கு அமைதி தருவீராக!"

"எத்தனைவிதம் கூறினாலும் என் நிலைமாற வழியில்லையே! இப்போது நான் சென்றுவிடுகிறேன்-இனியொருமுறை வருகிறேன்"

"இல்லை! இந்த இடத்தைவிட்டுச் செல்ல முடியாது. உமது மற்றொரு காலையும் துண்டித்து விடுகிறேன். பிறகு நீர் எங்கும் செல்ல முடியாது. இங்கேயேதான் இருக்க வேண்டிவரும். அப்போது என்னை அடிக்கடி பார்த்துப் பார்த்து என்றேனும் ஒருநாள் நீரே மனந்திருந்தி எழுதத் தொடங்குவீர். அதுதான் உமக்குற்ற தீர்ப்பு" என்று கூறி வாளை உருவி ஓங்கினான்.

ஓவியன், வாள்வீச்சுக்குச் சிறிதும் அஞ்ச வில்லை. மாருகச் சிரித்தான். மன்னனுக்கு அவன் செயல் வியப்பையும் அத்துடன் வேகத்தையும் தந்தது. ஆதலின் கடுங் கோபத்துடன்.

"ஏன் சிரிக்கிருய்."

"வேந்தே! எனக்குற்ற தீர்ப்பை நான் மறுக்க முடியாது. அதற்குரிய தண்டனையும் நிறைவேற்றப்பட்டுவிட்டால் பிறகு என் விருப் பத்தை நீங்கள் மறுக்க இயலாதல்லவா! அதாவது நான் குறைக்கப்பட்ட அங்கத்தின ஞக வெளியே செல்ல முடியும் என்பதை எண்ணும்போது என் உறுப்புகள் எனக்கு உதவும் தன்மையை நினைத்தே சிரித்தேன். தவிரவும் மன்னர்களுக்குக் கலைஞர்களின் அங்கங்களைக் குறைப்பதில் எவ்வளவு மகிழ்ச்சி பிறக்கிறது என்பதும் என்சிரிப்புக்குக் காரண மாகும். முன்னொரு மன்னனுல் என் ஒருகால் துண்டிக்கப்பட்டது. இன்று தங்களால் மற் ரெருகால் துண்டிக்கப்படப் போகிறது. துண் டிக்கப்பட்ட என் காலை மீண்டும் உருவாக்கித் தரும் வல்லமை இல்லையாயினும் வளர்ந்த தைத் துண்டிக்க முற்படும் செயல் வியப்புக் குரியதல்லவா! இத்தனைக்கும் காரணம் உங்கள் விருப்பம் நிறைவேற்றப்பட வேண்டு மென்பதுதானே! நீங்கள் விரும்புவதை நிறை வேற்ற வேண்டுமென விரைவதுபோல, அதை மறுக்கும் உரிமையும் மனிதனுகப் பிறந்த ஒரு வனுக்கு இருக்கிறது என்பதை ஏனே மறந்து விடுகிறீர்கள். வேந்தே! சீக்கிரம் ஆகட்டும். கால் துண்டிக்கப்படட்டும். நான் வெளியேறு கிறேன். அதன்பிறகாவது உணருங்கள். அங் கங்கள் குறைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் உள்ளம் திரும்பிவிடாது என்பதை கண்டு கொள்ளுங்கள். ஆகட்டும் மன்ன! ஏன் தாமதம். இடையே என் பேச்சுக்கள் காலத்தை வீணுக்கிவிட்டனவா! மன்னித் தரு ளுங்கள் மன்னவா! சீக்கிரம் என் காலைத் துண்டித்து எனக்கு விடுதலை தாருங்கள். எனக்கிது புது நிகழ்ச்சியாக இருந்தால்-ஏற் படப்போகும் வேதனையைப்பற்றி நான் அறி யாதவனுக இருந்தால் சிறிதே அஞ்சுவேன். இப்போது இது எனக்குப் பழக்கப்பட்டுப் போன நிகழ்ச்சி. ஆதலால் கலங்கமாட்டேன். கலங்கவும் தேவையில்லை. ஏன் மன்ன தாமதம்! சீக்கிரம் நிறைவேற்றுங்கள்."

இச்சொற்களைக்கேட்ட மன்னனின் சிந்தனை சிதறி ஓடியது. சித்தம் சோர்ந்தான். மன்னர் களின் செயல்களைக் கலைஞன் குறிப்பிட்டுக் காட்டியது போன்ற சொற்களைக்கொண்டு சீர்தூக்கிப் பார்த்தான். தன் வரையில் நாணினுன். உருவிய வாளை உறையில் சேர்த் தான். தன் உள்ளக் கிடக்கையையும் மாற்றிக் கொள்ள முடியவில்லை. விருப்பத்தின் எழுச்சி யால் விளையவிருந்த தீங்கை எண்ணி மனம் பதைத்தான். மக்கள்தம் மனேநிலைக்கு அர சியலும், அரச முறைகளும் எவ்வளவு தீங் கிழைத்திருக்குமோ என்று எண்ணிச் செய லற்று நின்றுன். அப்போதும் அவன் எண் ணம் ஓவியனுல் தன் உருவம் தீட்டப்பட வேண்டுமென்பதிலிருந்து நீங்கவில்லை! அத் துடன் ஓவியன் கூறிய செய்தியில் முன்னொரு மன்னன் ஒரு காலைக் குறைத்தான் என்பதன் விளக்கம் அறிய விரும்பினுன்.

"ஓவியரே! உமது விருப்பத்தைக் கெடுக்க வும் மனமில்லை! ஆயினும் என் ஆவலை அகற் றிக் கொள்ளவும் இயலவில்லை! என் கோபத் திற்கும் செயலுக்கும் காரணம் அந்தக் கலை யின்பால் எனக்குள்ளபற்றும், அதை நிறை வேற்ற நீர் மறுப்பதைப் பொறுக்க இய லாமையுமேயாகும். நீர் சொல்லி வந்தவை களில் முன்னொரு மன்னனுல் ஒருகால் துண் டிக்கப்பட்டது என்றீரே அதன் விவரம் அறியக் கூறுவீரா!"

"மன்னவா! முன்பொரு மன்னன் தன் உருவத்தை வரையவேண்டுமென்று தன் அவைக்கு அழைத்தான். சென்றிருந்தேன். அங்கும் இதேநிலைதான். யாவரும் தான்விரும் புவது நிறைவேறவேண்டுமென்றுதான் கருது கிருர்கள்! அதே விருப்பமும் தன்மையும் பிறருக்கும் உண்டென்பதை மறந்து விடு கிருர்கள். உரிமை ஒருசார்பில் மட்டும் தங்கி விட்டதாக நம்புகிருர்கள். அதன்பயனுல் உரிமைக்கு அதிக விகிதம் கொடுத்துச் செய லாற்ற முனைந்து விடுகிருர்கள். அந்த வேளை யில் மனித தர்மத்தைக் கூட மறந்து விடு கிருர்கள். அதுதான் அங்கே நிகழ்ந்தது. நான் அரசவைக்குச் சென்றவுடன் வர வேற்பு பாராட்டு வாழ்த்து இவைகள் கிடைத் தன. மன்னரின் விருப்பத்திற்குப் பாத்திர மானவனுக இலங்கினேன். ஆனுல் மன்னரின் விருப்பத்தைச் செவியேற்றதும் கலங்கி னேன். மன்னரின் உருவப்படம் வரை யப்பட வேண்டுமென்பதுதான் அங்கிருந்து நான் பெற்ற ஆணை. அதை நிறைவேற்றி விட வேண்டுமென்று எவ்வளவோ முனைந் தேன். அதுமட்டும் என்னுல் இயலவில்லை. அதை நிறைவேற்ற என் உள்ளத்தை எங் கெங்கு வகையிலெல்லாமோ பணித்துப் பார்த் தேன். முயற்சிகள் பயன்படாது போயிற்று. ஆனுல் மன்னரின் எண்ணமோ சொல்லோ

அணுவளவேனும் மாறுபட வழியில்லை. முதலில் சொன்னவற்றையே சொல்லிக் கொண்டிருந்தார். அன்று நடை பெற்ற நிகழ்ச்சிகள் இன்னும் என் உள்ளத்தைவிட்டு மறையவில்லை. அன்றைய நிகழ்ச்சியின் பயன் எல்லோருக்கும் காட்டத் தகுந்த அடையாளச் சின்னமாக மாறிவிட்டது''

• நான் அரண்மனைக்குள் நுழைந்ததும்

மன்னன் : வாரும் ஓவியர் பெருமகனாரே! எண்ணத்தில் எழும் உருவங்களை எதிரில் வடித்துக் காட்டும் வல்லமையுற்ற வள்ளலே! வரையாதுதந்து வளங்காணினும், எதிர் மறைந்தால் அவை உண்டோ - இல்லையோ என மறந்து போவது போலல்லாது, காண்கின்றபோதெல்லாம் கருத்துள் இனிக்கத் தகு இன்பத்தை வாரி வழங்கும் கைவண்ணம் படைத்தோரே! வருக. உமது வருகைக்கு முன்னரே உமது ஆற்றல் விளக்க வரலாறு என் இதயத்தை நிறைத்துவிட்டது. இப்படி அமரும். யாவரும் வேண்டி. வேட்டதுபெறும் நிலையில் வீற்றிருக்கும் நான் உம்மை ஒன்று கேட்டுப் பெற விரும்புகின்றேன். தன்னைத் தான் ஆடியில் காண்கின்ற போதிலும், அதிலொருபுதுமை காண்பான் போல மகிழும் மாந்தரினத்துற்ற யான் கண்ட உருவத்தைக் காட்சிப் பொருளாக்கிக் காட்டும் உம் திறமை கலந்து தீட்டப்பட் என் உருவத்தை எதிர் வைத்துக் காண விழைகிறேன். என் ஆசையைச் செயலாற்றிக் காட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கலைஞன் : மன்னர் பெருந்தகையே! தங்கள் விருப்பத்தைக் கேட்கும் பயனையே பெரும் பேருகக் கருதுவேன். ஆனால் என் தன்மையையும் சற்றே ஆராய்ந்து பார்த்து ஏற்றுக் கொள்ள வேண்டுகின்றேன். பொதுவாகக் கலைஞர்களின் உள்ளம் கலையின் பால் பொருந்திச் செயற்படும்போதுதான் அந்தக் கலை உயர்வுக்குரியதாகிறது. அதுவல்லாமல் தட்டிப் பழுக்கவைக்கும் கனிப் பயன்போலக் கலையின் பயனும் பெற இயலாது. ஆகவே நான் சென்று மீண்டும் வந்து தங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறேன். விடைபெற்றுக் கொள்கிறேன்.

மன்னன் : வேண்டாம் கலைஞரே! இங்கேயே தங்கியிருங்கள். வேண்டிய வசதிகளும் தேவையை உணர்ந்து தரவல்ல வகையும் பணியாளர்களையும் ஏற்பாடு செய்கிறேன். எனவே தாங்கள் இங்கிருந்து எங்கும் செல்ல வேண்டாம்.

கலைஞன் : தங்கள் விருப்பம் அதுவானால் அவ்வாறு செய்ய மறுக்க என்னால் இயலுமா? ஆணைப்படியே நடக்கிறேன்.

என்று கூறி அரண்மனையிலேயே தங்கியிருந்தேன். எனக்கு எவ்விதக் குறையுமின்றி எல்லா நலனும் தரப்பட்டது. நானும் அதன் பயனாகவாவது மன்னரின் உருவைத் தீட்ட எத்தனங்கள் செய்துகொண்டிருந்தேன். செயல்படவில்லை என் பிரயத்தனங்கள். ஒரு நாள், மாலைப்பொழுதிலே உத்யானவனத்தை நாடிச் சென்று அங்குள்ள வெண்பாறையொன்றின் மீதமர்ந்தேன். அங்கே அழகென்னும் சொல்லெல்லாம் சேர்ந்து உருப்பெற்றாற் போன்ற ஒயிலாள், பெண்மையின் உயர் பொருள்களின் கருவூலம், இயற்கை இருந்து எழிலாட்சி செய்யும் தனி மாளிகை போன்று அங்கே தோன்றினாள். அவளைக் கண்டேன். அவள் யாரென அறிய என் கருத்துச் செல்லவில்லை. உடனே பக்கலிலிருந்த பச்சிலைகளை ஆய்ந்து அவற்றின் உதவியால் அந்த வெண் கற்பாறையில் மின்னற்துடியணங்கின் பொன்னவிர் வடிவத்தை வரைந்தேன். அவளும் என் செயலுக்குத் துணை நிற்பாள்போல் கோமேதகச் சிலைபோன்று நின்றுகொண்டிருந்தாள். உருவம் முழுமையும் என் கருத்துள் நிறைந்தவாறு வரைந்து முடித்தேன். முடிவுற்ற சித்திரத்தின் மெய்யழகு கண்டு நான் பூரித்திருக்கையில்

''நன்று நன்று ஓவியனே! ஓவியன் வடிவில் வந்துள்ள காமுகனே! உன் கை, பெண்களின் வடிவத்தைக் கண்டால் நொடிப்பொழுதில் தீட்ட முனையுமோ! கலைஞன்! கலைஞன் உள்ளம்! கள்ள உள்ளத்திற்குக் கலையென்ற மேற்பூச்சிட்டுக் காரிகையர் உருவமைக்கக் கருத்துக்குஇடங்கொடுக்கும் கயவனே! கண்டு கொண்டேன் உன் கருத்து இன்னதென்று. இதுவரை நீகொண்டு செயலாற்றி வந்த உன் ஈனச்செயல்கள் இங்கேயேதான் முற்றுப் பெறப் போகிறதென்பதை இதற்கு முன் நீ எண்ணமிட்டிருக்க மாட்டாய். ஆண்களின் உருவத்தைத் தீட்டுவதாயின் உள்ளத்தில் எழுச்சியில்லையென்று உடல் பதறுது கூறி உயிர் வாழ்ந்துவந்த உலுத்தனே, இன்றே உன் உன்மத்தமதிக்கு இறுதிநாள்''

''மன்னவா! இப்போதும் சொல்லுகிறேன் கலைஞனின் உள்ளம் எத்தகையதென்று; கன்னியென்றதும் அல்ல—கண்ணில் காட்சிப் பொருளாகின்ற எவற்றிலும் இயற்கையுடன் பொருந்திய எழிலைக் காண்பானேயானால் அதனைத் தன் கலைப்பயனாக்கி வெளியிட

முனைகிருன் கலைஞன். கற்பனையைக் கணக்கிட்டுப் பெருக்குமுன், கண்ணிமைப்பொழுது காட்சி யளிக்கும் தோற்றத்தை உள்ளத்தே பதியவைத்துக்கொண்டு, கண்டசுவடு கடுகத்தனையும் பிறழாமல் உள்ளதை உள்ளவாறு உருவகப்படுத்தி வெளியிடுகிருன் கலைஞன். காட்டிலே உலவும் கொடுஞ்சிங்கமும் கொல்புலியும் மதயானையும் மற்றுமுள்ள உயிர்குடித்து உயிர்வாழும் அய்யறிவுயிர்களாயினும் அவற்றின் தன்மையைக் கண்டஞ்சாமல், அவை தம் இயற்கைத் தோற்றத்தையும், அதற்கு இணையிருக்கும் இயற்கை யன்னையின் எழில்துணையையுமே காண்கிருன் கலைஞன். அவ்வாறு காண்கின்றபோதுங்கூட அவை நம்மைக் கொல்லவருமே என்று கலங்குவதில்லை. முடிந்தால்-சாத்தியப்படுமெனக் கொள்ளச் சற்றே வகையிருந்தால் அங்கேயே அவற்றின் உருவத்தை வரைந்து மகிழ்கிருன். இவையெல்லாம் கலைஞனின் உள்ளப்போக்குகளுக்கோர் எடுத்துக்காட்டு. தற்போதைய உங்கள் உள்ளம் கிளர்ச்சி பெற்றுக் கடுங்கோபங்கொண்டிருக்கும் நிலையில் என்சொற்கள் எரியில்கொட்டிய தேன் துளிபோலவாகிவிடும் என்பதை நன்கறிவேன். என்ருலும் என் கடமை அதுவென்பதாலும், தங்கள் கருத்து என்வரையில் கொண்டிருப்பது தவருன முடிவு என்பதை எடுத்துச் சொல்ல வேண்டிய நிலைமையிருப்பதாலுமே கூறினேன். ஏற்குமோ ஏற்காதோ உங்கள் உள்ளம். அதை நான் எண்ணமிடவும் முடியாது.''

"ஆஹா! சித்திரம் வரைவதில் மட்டுமல்ல சிங்காரமாய் பேசவும் கற்றிருக்கிருய். மூடனே! செய்துவிட்ட செயலுக்கு உற்ற வகை கூற வழியற்றுப் போனதை யுணர்ந்து வயனமான புனைவுகளைக் கூறி என் வாள் முனைக்குத் தப்ப முயற்சி செய்கிருய். அத்துடன் என்னையும் இழிவுபடுத்தத் தகுந்த அளவில் என்னெதிர் நின்றே கூறுகிருய். எவ்வளவு ஏற்றம் பெற்றிருக்க வேண்டும் உன் இதயம்.''

"மன்ன!"

"என்ன! உண்மையைக் கண்டறிந்துகொள்ளின்ற வகையில் நடந்து கொண்டோமே என்று துடிக்கிறதா உள்ளம். நீ கூறியதெல்லாம் என்ன? பிறவற்றைக் காணும்போது கருத்து நிறைந்து, நினைவு நிலைத்து, செயல் வெளிப்பட உதவியாக இருக்கிறது—உமது உருவத்தைக் காண்கின்றபோது அத்தகைய நிலை எனக்கு ஏற்படவில்லை என்பதைத் தானே கூருமல் கூறிவந்தாய். இதை உணருந் தன்மை எனக்கு இல்லாமல் போய்விடும்; அல்லது இவற்றை ஒரு பொருளாகக்கொள்ள மாட்டேன் என்பது உன் எண்ணம். தன் எண்ணத்திற்கு உயர்வளித்துப் பிறர் எண்ணத்தைத் தாழ்வாகக் கருதும் உன் போலிகளின் செயல்கள் வேறு எவ்வாறிருக்க முடியும். இவ்வாறு உன்னை வளரவிட்டு வந்தவர்கள், உன்வளர்ச்சியால் ஏற்பட்டுவிடக் கூடிய தீமையை உணர்ந்திருக்கமாட்டார்கள். நானுந்தான் முதலில் உன்னை உணராமல் போனேன். இப்போது உணர்ந்துகொண்டேன். இனியும் உன்னை அவ்வாறே வளர விட்டுவிடப் போவதில்லை! இப்போதே தயாராகிக்கொள். இங்கு 'நிகழ்ந்த இன்றைய நிகழ்ச்சி உன் வாழ்விலேயே என்றென்றும் மறக்க முடியாததாக நிலைத்துவிடும்; இங்கு உனக்குக் கற்றுக் கொடுக்கப்படும் பாடம் வாழ்நாள் இறுதிவரையில் நெடிது நிலைத்திருக்கும்; வையம் மறையும் போதல்லாது மற்றெப்போதும் மறையாத தன்மையை உன் கலைக்கு ஏற்படுத்த நினைத்திருப்பாய். நானதை உன் நிலைக்குத் தருகிறேன். பெற்றுக் கொள்ளத் தயாராகிவிடு' இன்றுமுதல் நீமட்டுமல்ல உன்னைப் போன்ற திமிர்கொண்ட கலைஞர்கள் அனைவருக்குமே நீ ஒரு எடுத்துக் காட்டாக இரு.''

என்று தன் வாளாலேயே என் காலைத் துண்டித்தான். வேதனையால் துடித்தேன் துவண்டேன்; அலறினேன் அழுதேன்; என் அங்கத்தைக் குறைக்கத் துணையாக இருந்த இந்தக் கலையைப் பழித்தேன்; என் கால்களைக் குறைத்தவரானால் கைகளைக் குறைத்திருக்கக் கூடாதா என்று அந்த மன்னனையே கேட்டேன்.

"அரசு வீற்று ஆளும் பொறுப்பேற்ற அண்ணலே! ஒரு அறுதைக்குத் தன் கலையிடம் கூடவா உரிமையில்லை. நீர் ஆளுகிறீர். இன்னின்ன சமயத்தில் உமது ஆளுகை இப்படி இப்படி இருக்க வேண்டுமென உமது போக்கில் குறுக்கிட்டு ஒருவர் கூறினல் உமது உள்ளம் எந்த நிலையை எய்தும். என்னைக் கட்டுப்படுத்த உமக்கென்ன உரிமை இருக்கிறது. நீர்புவியாள்கிறீர். நான் கலையை ஆள்கிறேன். என்னை ஆக்ரமிக்க உமக்கு வந்த துணிவுதான் என்ன! என்னைக் கட்டுப்படுத்த உமக்கு ஏது அதிகாரம்''

எனக் கூறியவாறே அவ்விடத்தைவிட்டுக் குருதி தோய்ந்த கால்களுடன் வெளியேறப் புறப்பட்டேன்.

"மன்ன இதோ என் கால்களிலிருந்துவழிந்தோடும் குருதிப் படலம், என்னையும்—கொடுமையே உருவாய், கையில் உருவிய வாளுடன் என் கால் குறைத்து நிற்கும் உமது கடுங்

கோபத் தோற்றத்தையும் உமக்குக் காட்டிக் கொண்டே இருக்கும். கண்டு களியும். பார்த்துப் பரவசப்படும்."

என்றவாறே அவ்விடம் விட்டு அகன்றேன். அப்போதுதான் அந்த மன்னனின் கலை உள்ளத்தை உணர்ந்தேன். நெடிது நின்றிருந்த அந்த நீள் புவியாள்வோன் தன் வாளைக்கீழே எறிந்துவிட்டு என்னைத் தடுத்து:

"கலைஞர் திலகமே! இவ்விடம் விட்டுச் செல்லாதீர். என் கோபத்திற்கு மனதைப் பறி கொடுத்துவிட்டேன். இப்போது உமது கால்கள் குறைக்கப்பட்டுவிட்ட குற்றத்திற்காக நான் பெரிதும் என்னுள்ளேயே என்னைத் தண்டித்துக் கொள்கிறேன். ஆனாலும்; உமது கையால் என் உருவம் தீட்டப்பட முடியாமல் செய்துவிட்டேனே என்றே பெரிதும் வருந்துகிறேன். உமக்கு நான் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன். என் வேண்டுகோளை மறுக்காதீர். இங்கேயே இரும். காலைக் குணப்படுத்திக் கொண்டபின் நீர் விரும்பினால் செல்லலாம்."

என்று சொல்லி இரந்து நின்றான். மேலும் அவன் உள்ளத்தைப் புண்படுத்த என்னால் இயலவில்லை. அங்கேயே தங்கினேன். என் கால்கள் குணமடைந்துவிட்டன. ஒருநாள் அந்த மன்னனின் ஆர்வ உள்ளத்தைப்பற்றி எண்ணமிட்டுக்கொண்டிருந்தபோது அவன் ஒரு சமயம் மருத்துவருடன் வந்திருந்து என் கால்புண் குணமாய்விட்டதைக் கண்டு சற்றே மகிழ்ந்து நின்றான். அந்த மகிழ்ச்சியில் அவன் சிந்தனை எங்கெங்கோ சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது. அதனால் சிரித்த முகமும் சிந்தனையும் தோய நின்றவண்ணமிருந்தான் சிலைபோல. அந்த உருவம் என் உள்ளத்தை ஊடுருவியது, அப்போதே சென்று மெள்ள நானிருந்த ஓவியக்கூடத்திற்குள் நுழைந்து அங்கே வைக்கப்பட்டிருந்த கருவிகளின் மூலம் மன்னன் உருவத்தைத் தீட்டி முடித்தேன். சற்றுநேரத்திற்கெல்லாம் கலைஞரே! கலைஞரே! என்று உரத்த குரலில் அழைக்கும் ஒலி கேட்டது.

மன்னன்தான். நானிருந்த மருத்துவ அறையில் என்னைக் காணாமையால் தேடி ஓடி அலைந்து வந்தான். வந்ததும் அங்கு அமைத்து வைக்கப்பட்டிருந்த உயிரோவியத்தைக் கண்டான். அவன் கண்கள் தாமே நீரைச் சொரிந்தன. சிறு பிள்ளைபோல் என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு அழ ஆரம்பித்து விட்டான்.

''கலையின் சிகரமே! உமது கடமையைச் செய்துவிட்டீர். அத்துடன் என் கயமையை நித்தநித்தம் எடுத்துக் காட்டுகின்றவகையல்லவா செய்துவிட்டீர். எப்படித் தாழுவேன், நான் செய்த தீமையின் கொடுமையை என்னை மன்னிப்பீரா"

தேம்பித் தேம்பி அழுதுகொண்டே இவ்வாறு கேட்டான். அவன் உள்ளத்தின் அன்பு மொழிகள் ஆர்வப் பெருக்கால் அழுகுரலாக மாறி வெளிவருகின்ற அந்த நிலையை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை நானும் அழுதேன்.

"மன்னர்குல மாணிக்கமே! நான் உம்மை மன்னிப்பதா! இதென்ன பேதமை. நீர் என்னைத் தண்டித்தீரென்ற எண்ணத்தையே மறந்துவிடும். வாரும் தனி இடத்திற்குச் செல்வோம்"

அவ்விடம் விட்டகன்றோம். ஆனந்தப் பெருக்கால் அமுதூறும் மொழிகளைக் கொட்டி என்னை ஆறு இன்பத்திலாழ்த்தினான். சற்றுப் பொறுத்து:

"மன்னா நான் இன்றே இவ்விடம்விட்டுச் செல்கிறேன். என் உள்ளம் எப்போதும் வெளியிடங்களையும், சுற்றுப்புறக் காட்சிகளையும் காணவே அவாவுறுகின்றது. மேலும் நான் இங்கிருப்பதால் என் கலைப் பயனை நீர் உணர்ந்து மகிழ்வதைவிட்டுக் குறைக்காலை எண்ணியே உள்ளம் வருந்துவீர். அது எனக்குத் தெரியும். ஆகவே எனக்கு விடைகொடும் இனி எப்போதும் கலைஞர்களின் உள்ளத்திற்குக் கடுகத்தினையும் மறுப்புத்தராதீர். இதுவே நான் உம்மிடம் விரும்பும் கைம்மாறு. என்று கேட்டுக்கொண்டு பிரிய மனமற்றுத் துடித்து நின்ற அந்தக் கோமகனைப் பிரிந்து வந்துவிட்டேன். அன்று தொடங்கி, நான் மறந்தாலும் நடக்க முயற்சிக்கும்போது இக்கால்கள் அந்த மன்னவனை என் நினைவிற்குக் கொண்டுவந்து விடும். ஆகவே சில நாட்களுக்கெல்லாம் அவ்வூரைவிட்டே வெளியேறி வந்துவிட்டேன். அத்துடன் சித்திரம் எழுதுகின்ற பழக்கத்தையும் நிறுத்திக்கொண்டேன். ஆதலின் அதற்கு முன்பெல்லாம் எங்காவது சென்று திறங்காட்டி வாழ்வை நடத்திவந்த எனக்கு, வாழ்க்கையின் நிலையில் மாற்றம் ஏற்றப்பட்டது. இறந்துண்டு வாழும் நிலையை எய்திவிட்டேன். உண்மைக்கலைக்கு உயர்வளிப்போர் கூட்டம் குறைந்து வந்து கொண்டிருந்த காலமாதலின் கலை நுணுக்கங்களும் குறுகிக் கொண்டே வந்தன. இவ்வாறான நிலையில் பலப்பல ஊர்களையும் கடந்து இந்த நாட்டிற்கு வந்து சேர்ந்தேன். அனுதையை அனுதையே அடுப்பதுபோல, ஒரு கள்ளமில்லாச் சிறுவன்

உலகமறியாமதலே—என்னைச் சுற்றிச் சுழன்று திரியும் சுந்தரச் செல்வன் ஒருவன் என்னை அடிமை கொண்டுவிட்டான். அவன் ஆறுத லுக்காக, ஒருநாள் சித்திரமொன்று தீட்டிக் காட்டி அவனை மகிழ்வித்தேன். அதிலிருந்து அவனிடம் நான் எதைக் கூற வேண்டுமென் றாலும் அதற்கு ஒரு சித்திரம் கூலியாக வரைய வேண்டும். இந்த நிலையில் அவன்தான் எனக்கு வையம்—வாழ்வு—வாழ்வின் நலன் எல்லாம். அவனுக்காகவே நான் மறந்து விட்ட—என்வரையில் இறந்துவிட்டதாகவே கருதிய இந்தக் கலையை மீண்டும் கையாண் டேன். இங்கே என்னைக் கைதுசெய்து கொண்டுவரும்போதுங்கூட, நான் கைது செய் யப்படுவதற்காகவோ—எனக்கு என்ன நிலை வந்தெய்துமோ என்பதற்காகவோ தயங்கி வருந்தவில்லை. என்னைவிட்டுப் புறஞ்சென் றிருந்த அந்த ஏதுமறியாத இளஞ்சேய் வந்து நின்று, செய்வகையறியாது திகைத்துத் தவிப்பானே என்றெண்ணியே வருந்தினேன். பொறுக்கும்படி காவலரை வேண்டினேன். யாதும் பயனற்று இழுத்து வரப்பட்டேன். இப்போதும் அங்கு சென்று அவனைக் காணவே துடித்து ஓடுகிறேன். அதற்குமுன், உருவப்பட்ட உங்கள் வாளுக்குரிய அலுவ லுக்கு என் உடலில் எந்தக் கூறையாவது கொடுத்துவிட்டுச் சென்று விடுவோமென்றே எண்ணினேன். இடையில் என் பழைய நிகழ்ச்சியைச் சொல்ல நேர்ந்துவிட்டது. மன்னா! ஆகட்டும். வாளுக்கு எந்த உருப்பின் மீது ஆதிக்கமோ அது நடைபெறட்டும்"

"இல்லை கலைஞரே! உமது உள்ளம் இனி என்று விரும்புமோ அன்றே என்உருவம் வரையப்படட்டும்"

என்று கூறி முடிப்பதற்குள் "தாத்தா" என்று கூவியபடி ஒரு சிறுவனும், அவனைப் பின்தொடர்ந்து சில வீரர்களும் ஓடிவந்தனர். "காவலைக்கடந்து ஓடிவந்து விட்டான்" என்று சிறுவன்மேல் குற்றம் சாட்டப்பட்டது. அப்போதும் அழுது கொண்டே வந்து நின்ற சிறுவனின் அழுகை போக்க, கலைஞன் ஓவியம் தீட்டினான். அது எதிர்நின்ற மன்னனின் உரு வம். அதைக் கண்டு மன்னன் மகிழ்ந்தான். அவன் வாய் வாழ்த்தத் தொடங்கியது "வாழ்க ஓவியன் உள்ளம்" என்று.

தேசியப் படையில் பணியாற்றி வந்த ஒருவருக்கு, காப்டன் பதவி உயர்வு கிடைத்தது. அரசினரிடமிருந்து வந்த அதற்கான அறிக்கையில் பதவி உயர்வுக்கான நாள் ஏப்ரல் முதல் தேதி, 1857 என்று குறிப்பிடப்பட்டிருந்தது 1957 என்பதற்குப் பதிலாக.

பதவி உயர்வை யொட்டி அந்தப் புதிய காப்டன் தனது நண்பர்களுக்கு ஒரு விருந்து அளித்தார். மகிழ்ச்சிப் பெருக்கில் கூடியிருந்த நண்பர்கள். அரசினர் அறிக்கையில் காணப்பட்ட ஆண்டுப்பிழையை, பிழையாகக் கருதாமல் "சென்றகாலத்தில் விடுபட்ட, அரசினர் உத்திரவில் அடங்கியுள்ளபடி காப்படன்களுக்கான அலவன்ஸ் தொகை 1857லிருந்து தனக்கு அளிக்கப் படவேண்டும்" என்று ஒரு மனுவை வேடிக்கைக்காக அந்தக்காப்டனை எழுதத் தூண்டினர். கடைசியில் சரியான முறையில் ஒரு மனு தயாரிக்கப்பட்டு மேலதிகாரிக்கு அனுப்பப்பட்டது.,

சில வாரங்களுக்குப் பிறகு மேலதிகாரியிடமிருந்து காப்டனுக்கு கீழ்க்கண்ட பதில் கிடைத்தது.

"1857லிருந்து அலவன்ஸ் தொகை கோரி தாங்கள் அனுப்பியிருந்த மனு ஏற்றுக்கொள் ளப்பட்டு உங்கள் கணக்கில் ரூ 39,999 மட்டும் வரவுவைக்கப்பட்டது. மேலும் அரசினர் உத்தி ரவின் வேறொரு பிரிவை, அதாவது: "படையில் எச்சரிக்கையின்மையால் ஏற்படும் பொருள் அழிவிற்கு படையின் தளபதி தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டியவராவார். படைத் தளபதி கொல்லப்பட்டால் அவருடைய பொறுப்புகளெல்லாம் அவரையடுத்த அதிகாரியைச் சாரும்." என்ற பிரிவைத் தாங்கள் கவனிக்கவில்லை போலும்!

உங்களுடை கடிகத்தின் படி 1857ல் நடந்த கலகத்தின் போது படையில் இருந்தவர் களில் நீங்கள் ஒருவர்தான் தப்பியிருக்கின்றீர்கள் என்று தெரிகிறது. அப்போது உமது படை யினர் எச்சரிக்கையில்லாமல் இருந்ததால் ஒவ்வொன்றும் ரூ. 200 மதிப்பு பெறும் 200 குதிரை களை இழந்தனர். ஆகவே ரூ 40,000 செலுத்தப்படவேண்டிய பொறுப்பு உம்மைச் சேருகிறது. அதன்படி உங்கள் கணக்கு எழுதப்பட்டு, தற்போது கணக்கில் உங்கள் பற்று ரூபாய் ஒன்று நிற்கிறது."

(நாடகம்)—சென்ற இதழின் தொடர்ச்சி

வெற்றி யாருக்கு?

[அருணன்]

(வீரவர்மன் வெற்றித் தோளரை அழைத்துச் சென்று ஒரு இருக்கையில் அமர்த்தி உடனிருந்து பேசிக்கொண்டிருக்கிருன்.)

வீர: யாரங்கே! முழுக்குக்கு வேண்டியவகைகள் யாவும் ஏற்பாடு செய்யுங்கள். தூதுவரில் இருவரை இங்கே அனுப்பி வையுங்கள்.

(வெற்றித்தோளரைப் பார்த்து)

அய்யனே! ஏனிந்த நிலையுற்றீர். விரும்பியேற்ற நிலையா? அல்லது வெறுப்பால் நேர்ந்த விளைவா? என் உள்ளம் துடியாகத் துடிக்கிறது. சொல்லுங்கள்! தலை தாழ்த்தி முகம் மறைத்து வரநேர்ந்த வகைதான் என்ன?

வெற்: நான்...........நாடு கடத்தப்பட்டிருக்கிறேன் வீரவர்மா!

வீர: ஆ! யாரை யார் நாடு கடத்துவது? 'தங்கள் நாடு இது' என்று குறிப்பிட்டுக் கூறத் தகுந்த வாய்ப்பை ஏற்படுத்தித்தந்தவரையா நாடு கடத்துவது? அநீதி! இத்தகைய கொடுமையைச் செய்யக் கோரி நாட்டினர் எப்போது துணிவு பெற்றனர்?

வெற்: வீணுக இதற்கேன் சிந்தனையைச் செலவிட்டு ஆத்திரத்தை வரவழைத்துக் கொள்ளுகிருய் வீரவர்மா! என்னை நாடுகடத்திய அவர்கள் ஏதுமறியாதவர்கள். நான் நாட்டினுள் இருப்பதால் விளையும் நலமும், நாட்டைவிட்டு அகல்வதால் வரும் தீங்கும் அறிந்திருந்தால் இச்செயலை அவர்கள் மேற்கொண்டிருப்பார்களா?

வீர: அதற்காகவே அவர்களுக்கொரு நல்ல பாடங் கற்பிக்க நானே முடிவு செய்திருக்கிறேன். முதலில் நீங்கள் உடல்குளித்து உடைமாற்றி ஓய்வு கொள்ளுங்கள். ஏனையவற்றைப் பிறகு பேசிக்கொள்ளலாம்.

(தூதுவர் வருகை)

தூது: வணக்கம் மன்னு!

வீர: தூதுவரே! நீர்விரைந்து நமது தலைநகர் சென்று அமைச்சருக்கும் படைத்தலைவருக்கும் வெற்றித்தோளர் வந்திருக்கிருர் என்ற செய்தி கூறித் திரும்பும்

தூது: வெற்றித்தோளரா?

வீர: ஆம்! நம் விருந்தினராக! நீர் விரைந்து செல்லும். பிறகு காணலாம்.

(சென்றபின் ஒரு லிகிதம் எழுதுகிருன். வெற்றித் தோளர் வருகை)

வீர: (ஒருவனிடம்) நீதான் சரியான ஆள்! விரைந்து சென்று இதனைக் கொடுத்து ஆக்கிரமிப்புப் போர் அடுத்துத் தொடருமென்பதை அறிவித்துவா போ!

வெற்: யாருடன் போர் தொடுக்க வீரவர்மா?

வீர: வீரத்தால் சிறந்தோமென்று வீற்றிருக்கும் கோரி நாட்டினர்மீது.

வெற்: அய்யோ! வேண்டாம் வீரவர்மா செய்வதின்னவென்று அறியாது செயல் புரிந்த காரணத்திற்காக இவ்வளவு கொடுந்தண்டனையா? கூடாது! அவர்களை விட்டுவிடு. என்னை நாடு கடத்த வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இயல்பிலேவருமா? கூறுவார் குறுமொழிக்குச் செவிகொடுத்து மதியிழந்து விட்டார்கள். நான் அவர்களை மன்னிக்கிறேன்.

வீர: நானவர்களை உமது கால்களில் மண்டியிட வைக்கிறேன். உடன்பிறப்பிலும் உயர்வான நாட்டுப்பற்றையும் மறந்து வேற்றவர் மொழிக்கு ஆளாகி வீற்றிருக்கும் அவர்கள் இருப்பதைவிட, இல்லாமை எவ்வளவோ மேல். நீர் ஏன் மன்னிக்கிறீர். அவர்கள் உம்மை மன்னிப்புக் கேட்டார்களா? அந்த மனே நிலையின் சாயலாவது அவர்களிடம் இருந்திருந்தால் இந்த மந்தமதி படைத்திருப்பார்களா? வினையின் பயனை விதைத்தவனே அடைய வேண்டும். இங்கிருந்தே பாரும் அவர்கள் நிலை என்னவாகிறதென்று.

வெற்: என்மீதுள்ள ஆர்வத்தால் மிகவும் கொடுமையைச் செய்கிருய்! அதை நானும் எப்படி ஒப்புக்கொள்வது?

வீர: வெற்றித் தோளரே! நானுமது பகைவன். உம்மிடம் படையெடுக்கும் ஒரே நோக்கத்துடனேயே உமது நாட்டு எல்லையை அடுத்துப் பாசறை அமைத்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் என் போர்நோக்கம் எதுவென்பதை நீரே உணர்ந்திருப்பீர்; நீர் இங்கிருக்கிறீர். என் ஒரே எதிரி உம்மைத் தவிர என்னை எதிர்க்கவல்லவர்கள் எங்கும் இல்லையென்பது எனக்கு நன்றாகத் தெரியும். நீரோ என் வசமாய்விட்டீர்! நாடு பிடிப்பதொன்றே என் போரின் காரணமாக இருந்தால், பாசறையில் கால்வைத்த விநாடியே உம்மைக் கைது செய்திருப்பேன். என் நாட்டுக் கொடியைக் கோரி நாட்டின் கோட்டையில் பறக்க விட்டிருப்பேன்.

வெற்: இப்போது நீ என்னைக் கைது செய்தாலும் நான் கலங்கமாட்டேன் வீரவர்மா? உன் முயற்சிகளுக்கெல்லாம் ஒரு வெற்றியை நானே நேரில் வந்து தந்ததாக மகிழ்வேன். உன்னை நான் காண வந்தது 'இது உன் பாசறை' என்பதை அறியாமலல்ல! நீ என்னைக் கைதுசெய்தாலும், வெற்று மனிதனாய் வீதியில் திரிவதைவிட வீரனொருவனின் விருந்தாடியா யிருப்பது மேல் என்று துணிந்தே உள் நுழைந்தேன்.

வீர: வெற்றித் தோளரே! என்னை என்னவென்றுகருதிவிட்டீர். நாட்டாசை கொண்டு போர் முறை மறந்து மிருகம்போல் அகப்பட்டதை ஆக்ரமிக்கும் அறிவிலியென்று கருதினீர். உம்மைக் காண்பதையும் உம்முடன் உரையாட நேர்ந்ததையும் ஒரு பெருமையாகக் கொண்டாடுகிறேன். நான் மட்டுமல்ல என் தானைத் தலைவர்களும் அமைச்சராயினோரும் உம்மைக் காண அவாவுறுவரென்ற காரணத்தால் தலைநகருக்குச் செய்தியனுப்பி யிருக்கிறேன். இன்னேரம் அவர்கள் சிந்தைக்கினிய செய்தி கண்டு இன்பப் பெருக்கால் ஓடோடிவந்துசேர்வார்கள். அவ்வாறு நான் உம்மையொரு உயர்வுக்குரிய பொருளாகவே கருதியிருக்கிறேன்! ஆனால் இவற்றைத் தினையளவும் நினையாமல், நெஞ்சில் ஈரமற்று எடுப்பார் கைப்பிள்ளையாகி, தடுப்பாரின்றி, தான்தோன்றித்தனமாக உம்மை நாடு கடத்தியிருக்கிறார்களே! அவர்களின் தகாச் செயலுக்குத் தருவனதரவே போரென்று அறிவித்திருக்கிறேன்.

வெற்: உன் அறிவிப்பைத் தவறாகப் புரிந்துகொண்டு, நாடுகடத்திய காரணத்தால் நான் உன்னுடன் சேர்ந்துகொண்டு, தன் நாடு என்ற தன்மையும் மறந்து போரறிவிப்புச் செய்திருக்கிறேன் என்றெண்ணி வீணே என்னைத்தான் பழிப்பார்கள்.

வீர: வீணர்கள் செயலுக்குத் துணைபோன அவர் எண்ணத்தையும் தன்மையையும் பற்றி இன்னமும்நீங்களேன் கருதுகிறீர்கள்? அகம்பாவத்தால் நிமிர்ந்த அவர்கள் தலை பெரு நாணத்தால் நிலம் நோக்கவேண்டும். தகாச் சொல்லுக்கு உளங்கொடுத்த அவர்கள் தன்மை வீழ்ந்துபட்டு, செய்த செயலின் பயனைக் கையேற்க வேண்டும். எப்படிக் கூறினர் 'நாடு கடந்து செல்' என்று. தன் நாடு, தம் திறமை என்பவற்றை முன்னிட்டுத் தானே சொன்னார்கள். தன் நாட்டுக்குத் தம் திறமையை இப்போது பயன்படுத்தட்டுமே! நீங்களேன் வீண் கவலை கொள்கிறீர்கள்? தங்கள் வல்லமையை நம்பித்தானே உம்மை நாடு கடத்த முற்பட்டார்கள். அதே வல்லமையை இந்த நாட்கணக்கிலா இழந்துவிட்டிருக்கப் போகிறார்கள்.

வெற்: அவர்கள் ஏதும் அறியாதவர்கள் வீரவர்மா! வீணர்களின் வெற்றுரைக்குத் தங்கள் மதியைப் பறிகொடுத்து விட்டார்கள். அவர்கள் உள்ளத்தில் என்றுமே என்னை நாடுகடத்த வேண்டுமென்ற எண்ணம் ஏற்படமுடியாது!

வீர: ஏற்பட்டுவிட்ட எண்ணத்தின் பயனால் நிகழ்ந்துள்ள செயலின் தன்மையை எடுத்தெறியவும் முடியாதல்லவா?

வெற்: அதற்காக ஒருபோர்தொடுத்து அவர்களை அழிப்பது முறையா?

வீர: அவர்கள் இருப்பதால் எந்தவிதப்பயனுமில்லை! மாற்றார் சொல்லுக்கு உள்ளம் கொடுத்துச் செயலாற்றத் துணிந்து விட்ட அவர்களிடம் இனி இதமும் நேர்மையும் எதிர்பார்க்கமுடியாது. எனவேதான் ஏற்பட்டுவிட்ட இந்தப்பித்தநோய்க்கு உற்றதொரு மருத்துவம். அப்போதாகிலும் பித்தம் அகன்றால் ஆனந்தம் பெறுகிறார்கள்- இல்லையேல் அல்லலைக் கையேற்கட்டும்! வெற்றித்தோளன் வீண்மனிதன் அல்ல என்பதை அந்த வீரத்தின் வழி வந்தோர் உறுதி செய்து கொள்ளவும்-பழம்பெருமை காட்டிப்பணிவை விரும்பியசெயல் பரிகாசத்திற்குரிய தென்பதும் நன்கு உணரட்டும். அதற்குற்ற வாய்ப்பாக என்போரறிவிப்பு பயன்படட்டும்.

வெற்: உன் செயல், அவர்கள் திருந்தி விட்டால் திரும்பப்பெற்றுக்கொள்ளக் கூடியதல்லவே! ஆக்ரமிப்பு என்றே அறிவித்திருக்கிறாய். மறுத்தாலும் எதிர்க்கப்போகிறாய்- ஏற்றுக்கொண்டாலும் உன் அறிவிப்பை நிறைவேற்றப்போகிறாய். என்னபயன்?

வீர: வெற்றித்தோளரே! உமது நிலையை யெண்ணி நான் மிகவும் பரிதாபப்படுகிறேன்

வெற்: நான் அவர்களுக்கு இரங்குகிறேன்!

வீர: இரக்கம் காட்டக் கூடாதவர்களுக்கு, எத்தாலும் ஏற்ற மதிபெறமுடியாத அளவுக்கு இறுமாப்புக்கொண்டு விட்டவர்களுக்கு, தரங்கெட்டு நிலைவிட்டு, தகாதோர் பிடியிலகப்பட்டு, அவர்கள் தாளில் தண்டமிட்டு, அடிமைக்கு ஆட்பட்டுக் கும்பிட்டுக் குடிப் புகழைக்கெடுத்து விட்டவர்களுக்கு இரங்குகிறீர் அதுவும் உம்மை இழிநிலைக்கு ஆளாக்கியபின்னர். வெற்றித்தோளரே! என்னே உமது செயல்! எங்கே உமது எஃகு உள்ளம்! நாடுகடத்தியபோது அதுவும் அந்த நாட்டினருக்கு ஆகட்டுமென்றுவிட்டு வந்தீரா? அல்லது புதுக்கோலம் பூண்டு விட்டோமே என்பதற்காக அதனைப் போக்கடித்து விட்டீரா! தரையிலே வீழ்ந்து உயிர்போகுந் தருவாயிலிருப்பவனுனாலும் அவன் கைவாள் தூக்கி இருக்கும்வரை அவனை முழுவீரனுகவே கருதிப்போர் புரியும் உமது நெஞ்சமெங்கே? கோழைகளும் செய்ய அஞ்சும் செயலைக் கூசாமல் செய்துவிட்டு மீண்டும் குலப்பெருமை பேசிக் கூத்தடித்துக் கொண்டிருக்கும் அந்தக் கூட்டத்திற்குக் கும்பிட்டெழ அனுப்பினீரா? ஏன் மௌனமாக இருக்கிறீர்! அப்போதே கூறினேன் நண்பரே! நாடுபிடிக்கும் பேராசைகொண்டல்ல நான் போர்த்தூது அனுப்பியிருப்பது. வீரத்தை இழிவுபடுத்திய ஏதுங் கெட்டவர்கள் இழிமதிக்கு ஏற்றதொரு வகைகாட்டவே அனுப்பியிருக்கிறேன். நிகழப் போவதின்ன தென்பதையும் நான் அறியாதவனல்ல! தூதுவனைக்கண்டதும் துடித்தெழுவார்கள். ஆணவத்தால் எடுப்பான அவர்கள் நெஞ்சம் இப்போதும் அழிவைஎண்ணமிடாது 'ஆயத்தம்' என்று பதில் கொடுக்கும். அல்லது, அவர்கள் மறுக்கச் சித்தம் கொண்டாலும் இடையே இருக்கும் சந்தர்ப்பம் நோக்கிகள் - பிறர் அழிவில்தான் ஆனந்தம் காணும் நோக்கமுடையவர்கள் - தன் வாழ்வுக்கு எவர்வாழ்வாயினும் சரி பாழ்செய்து, தன்னைப் பாதுகாத்துக்கொள்ளப் பல்லிழிக்கும் பகல் வேஷக்காரர்கள் அவர்களைத் தடுத்துப் போரிடுங்கள் எனத் தூண்டிவிடுவர்— அவர் தம் வலையில் ஆணவக்காரரும் வீழ்வர், அதன் பயன் அழைப்பனுப்பி அழிவைக் கைக்கொள்வர்!

வெற்: நிச்சயமாக இல்லை வீரவர்மா? சற்றே சபலமதி படைத்தனரே யல்லாமல் மரமனம் படைத்தவர்களல்ல; எண்ணிப் பார்க்கும் தன்மை அவர்களை விட்டகன்றிருக்க முடியாது. எப்போதும் பெற்றறியாத ஒரு சிறுமையை இப்போது ஏற்கிறோமே என்றே எண்ணுவர். அதிலும் முக்கியமாக, நான் இங்கிருக்கிறேன் என்பதை இதுவரையில் எப்படியும் உணர்ந்திருப்பர். ஆகவே என்னை எதிர்த்து நிற்கவேண்டிய நிலைமை வந்தது கருதிக் கவலை கொள்வர்! நாணுவர்! உண்மை வீரர்கள் வெற்றி நமதே எண்றெண்ண மாட்டார்கள். அவ்வளவு உயர்ந்த பண்பாடுடைய அவர்கள், என்னை எதிர்த்துவரும் வெற்றியைவிட, தோல்வி வரின்? என்றெண்ணும்போது அவர்கள் இதயம் வேதனையைத்தான் ஏற்கும்.

வீர: ஏற்கட்டும்! ஏற்பது மட்டுமல்ல இடிந்து நொறுங்கட்டும்; எத்தர்களென்றறியாது அவர்கள் சொல்லுக்குச் சித்தம் கொண்ட அற்பத்தன்மை அவர்களை அணு அணுவாக வாட்டி வதைக்கட்டும். வீரம் விளைந்த நிலத்தில் வீணர்கள் விளையாட, விளைந்த வீரத்தையும் பாழாக்கி, பசுமைத் தரையைப் பாலைவனமாக்கிய பதடித்தனம் அவர்களைப் பாடாதபாடு படுத்தட்டும். அடுத்தவர் எடுத்துக் கூறும்போது அதன் உண்மை உணராது; எடுப்பும் இணையுமில்லாது திகழ்ந்த ஏந்தலை தாழ்ந்ததலையுடன், தன்மானங்கெட்டவன்போல, பிற எல்லைகளிலே செல்லச் செய்த சிறுமதிக்குப் பெரும் பரிசு பெறட்டும். சிங்கம் ஓய்ந்திருக்க ஓநாய் உறுமி உயர்வு கைக்கொள்ளுந் தன்மை இல்லாது ஒழியட்டும். வல்லமை விளங்கட்டும், வீரம் வாழட்டும், போலிகள் பொடியாகட்டும்.

வெற்: எல்லாம் ஆகட்டுமென்பேன், என் நாட்டவர்மீது படையெடுப்பு மட்டும் வேண்டாமென்கிறேன். நான் கோழையாகி விடவில்லை; கொடுமதியும் கொள்ள முடியவில்லை. தோள்கள் மரத்துப்போய் விடவில்லை; அதனால் வாளைத் தன்னவர்மீதே பாய்ச்சவும் துடிப்பில்லை; அவர்கள் என்னை மறக்க முடியாதநிலை; எனக்கோ அவர்களை மாய்க்க எண்ணாத மனநிலை. உன் அறிவிப்பைக் கண்டதும் அவர்கள் என்ன எண்ணுவார்களென்பதிலேயே என் கருத்துச் செல்கிறது. செழித்து வளர்கின்ற அரும்பயிரை அடுத்து அருகிருந்து அழித்து ஒழித்துப் பாழ்படுத்த ஒரு படுமோசக் கூட்டம் பக்கலிலேயே இருந்து வந்ததை, இதுவரை அறியாது, பதர்களை நல்மணிகளுடன் சேர்த்துக் களஞ்சியத்தில் கூட்டிக் காவலும் இருந்து

வந்திருக்கிறேன். காலம் கருதியிருக்கும் கய மைக்குணம் கொண்டோர் வஞ்சகனும் கொஞ்சம் அஞ்சும் நஞ்சுப் பொருளைச் செந் தேன் சொற்கலந்து பெய்து சீர்கெடுக்கும் வகைசெய்து பார்த்துப் பரவசத்தில் திழைத்திருக்கச் செய்துவிட்டேனே என் பதை எண்ண உள்ளம் உடைகிறது.

வீர: இந்த நல்ல உள்ளத்தின் தன்மையை அவர்கள் எள்ளத்தனையும் ஏற்றுக்கொள் ளப் போவதில்லை! ஏன் வீண் துயரம். வாருங்கள். சற்றே ஓய்வெடுத்துப் பிறகு உற்ற செயல்களுக்கு உரியமுறை செய்ய லாம்.

(செல்கின்றனர்)

காட்சி 11

இடம்: வேங்கை நாடு.

உறுப்பினர்: அமைச்சர், படைத்தலைவர், பாசறைத் தூதுவர். மற்றும் சிலர்.

நிகழ்ச்சி: தூதுவர் வருகை. அமைச்சர் எதிர்கொண்டு வரவேற்கிறார்.

அமை: வாரும்! வாரும் தூதுவரே! என்ன செய்தி.

தூது: எதிர்பார்த்திராத இன்பச் செய்தி.

அமை: போர் நிறுத்தமா?

தூது: அதையா எதிர்பார்த்திருந்தீர்!

அமை: எதையும், நான் எதிர்பார்ப்பதில் என்ன பயன். போரென்ற அறிவிப்பைத் தான் எப்போதும் எதிர்பார்ப்பேன். அது இல்லை என்ற செய்தியொன்று நான் இப் போது எதிர்பாராதவிதமாக வந்துள்ளதோ என்றுதான் வியப்புற்றேன். உமது பதிலி லிருந்து என்னவாக இருக்குமோ என்றும், அதுதரும் இன்பம் எத்தகையதோ என்றும் அறியவே ஆவலுள்ளவனாக இருக்கிறேன். தூதுவரே என்ன செய்தி! விரைவில் சொல் லும், அதை அறிய வேண்டுமென்ற துடிப்பை என் தோற்றமே உமக்குச் சொல் லாமற் சொல்லுமே—

தூது: வெற்றித் தோளர் நம் பாசறையி லிருக்கிறார்.

அமை: ஆ! நமது பாசறையிலா?

தூது: ஆம்!

ஒருவர்: எப்படி? நம் அரசர் அவரைக் கைதுசெய்து கொண்டுவந்து விட்டாரா?

அமை: யார் கேட்கும் கேள்வி இது! நம் அரசரல்ல! நம்மவரைப் போன்ற ஒரு அர சர்களின் பெரும்படையே நின்றாலும் அவர் ஒருவரின் ஆற்றலுக்கு முன் எம்மாத்திரம். அவர் தம் உடலில் உயிருள்ளவரையில் வீட்சியென்பதை அறிய முடியாது! அவர் நமது பாசறையிலிருக்கிறாரென்றால் அவரே தான் வந்திருக்க வேண்டும். அவ்வாறு வந் திருப்பதாயின் இரு நாடுகளுக்குமிடையே ஒரு மகிழ்வு மலரப் போகிறதென்றுதான் பொருள்.

(படைத் தலைவர் வருகை)

படைத்தலை: தூதுவரே! வருக! வருக! என்ன புதுச் செய்தியோ!

ஒருவர்: வெற்றித்தோளர் நம் பாசறையில் வந்திருக்கிறாராம்!

படை: ஆ! அப்படியா? அமைச்சர் பெரு மானே இப்போதே செல்ல வேண்டும். நான் முதலில் புறப்பட்டுச் செல்கிறேன்.

அமை: தளபதியாரே ஆர்வத்தில் பொறு ப்பை மறந்து விடுகிறீர். உள்ளக்கிளர்ச்சிக்கு உற்ற பதவியை மறந்து விடலாமா? திடு மென புறப்பட்டுச் சென்று கண் கொள்ளும் காட்சிகளைக் கண்டு களித்துத் திரும்பு கின்ற நிலையா அரசியல்? அதை எண்ணும்!

படை: அமைச்சர் பெருமானே! என் விரை வும் ஆர்வமும் தவறாகாதே! மேலும் நான் செல்லப் போவது விழாக்காண அல்ல! பாசறை நோக்கி. தவிரவும் வீரத் தலைவ னைக் காணவேண்டுமென்ற அவா, போரில் தன்னைப் பயன்படுத்திக் கொண்டவனுக்குச் சற்று அதிகமாகவே தெரியலாம். எனவே எனக்குப் போய்வர விடை கொடுங்கள்.

அமை: விடை தருவதல்ல! செய்தியே வந்திருக்கிறது. மன்னர் அனுப்பியுள்ளார்.

படை: அஹா! இங்கிருப்போரின் உள்ள நிலையை அளவிட்டே அரசர் கையாண் டிருக்கிறார் அந்த முறையை! அரைக்கண முந் தாமதிக்க வேண்டாம் புறப்படுங்கள்.

அமை: வந்திருக்கும் செய்தி உம்மையும் அழைத்து வரவேண்டுமென்று தெரிவிக்க வில்லை! ஆகவேதான் என் மனம் உம்மை அனுமதிக்கவில்லை! நீரே துணிந்து செல் வதாயிருந்தால் அட்டியில்லை. ஆர்வத் திற்கு ஏது எல்லை!

படை: இல்லைதான்! என்றாலும் விதிவிலக் கென்று ஒன்றிருக்கிறதல்லவா? மன்னர் அனுப்பும் செய்தியில் தன் மகிழ்ச்சிப் பெருக்கின் காரணமாகக்கூட இன்னின்னா ருக்கென்று பிரித்தெழுதாதிருந்திருக்க லாம். அல்லது செய்வகையறிந்து செய்யும் அமைச்சருக்கு நாம் விளக்கமும் தரவேண் டுமா என்று பொறுப்புக்கு உரித்தான உங் களின் விருப்பத்திற்கு விட்டிருக்கலாம்! எவ்வாறாயினும் என் துடிப்புத் தவறா காதே!

அமை: தவறென்று கூறவில்லையே நான். துடிப்பின் வேகம் செயல் முறைகளின் தரத்தைக் கெடுத்துவிடக்கூடாது ஆசையும் தேட்டமும் அதிகரிக்கின்றபோதுங்கூட அமைதியான தன்மைவேண்டும். அரசர்தம் அறிவிப்பில் உம்மையும் அழைத்து வரும்படியொரு குறிப்பும் உள்ளது. ஆயினும் உமது வேகத்தின் போக்கிலேயே நானும் நடந்து விட்டால் என் பொறுப்புகளைத் தவற விட்டவனாய் விடக்கூடாதல்லவா? மன்னரும் வெற்றித்தோளரைக் கண்டவுடனேயா செய்தியை அனுப்பி இருப்பார். இருந்து நிதானித்து வந்தவருக்குரிய உபசரிப்பும் விருந்தும் நிகழ்த்திய பின்னர் தானே நமக்கு அறிவித்திருப்பார். ஆகவே எதையும் செய்யும் முறைகளை-கடமைகளைச் செய்த பின்னரே நிறைவு காணவேண்டும். எனக்குமட்டும் ஆர்வ மில்லாமல் போகுமா? ஆனால், நான்புறப்பட்டுச்செல்லவும் சென்ற பின்னரும் நிகழவேண்டிய செயல் முறைகளுக்கு ஆவன யாவையும் செய்துவிட்டல்லவா செல்லவேண்டும். அதற்கு முன் சென்று விட்டால் கடமையில் வழுவியனாக மாட்டேனா? நீரும் அது போலவே சென்று உதவியாளர்களுக்கு வேண்டுவன கூறி ஆயத்தம் செய்து விட்டுப் பயணத்துக்குச் சித்தமாக இரும். நானும் வந்துவிடுகிறேன்.

படை: அப்படியே!

(படைத்தலைவர் செல்லுதல்-சென்றபின்,

அமை: தூதுவரே! சற்று ஓய்வு பெறும், அல்லது நாங்கள் புறப்பட்டு விட்டதாக முன்னர் சென்று செய்தியைக் கூறும் நாங்கள் வந்து சேருகிறோம்!

தூது: இல்லை அமைச்சர் பெருமானே நானும் உங்களுடனேயே வருகிறேன். எனக்கும் வழிச்செலவில் ஒரு இனிமையிருக்கும்! அத்துடன் தற்போது அங்கே சென்றுவிட்டால் மற்றுமொரு அலுவல் ஏற்பட்டு வேறெங்கேனும் செல்ல நேரிடும்! தங்களுடன் வந்தால் வெற்றித்தோளரைக் கண்டு களிக்கலாம்.....

அமை: தவறு! உமது சொல்லைக் கேட்டதும் உடனே போமென்று கூறியிருப்பேன்! ஆனால் 'உண்மை வீரத்தில் நாட்டங்கொண்டோருள்ளத்திலெல்லாம் தேட்டம் மிகும் வெற்றித் தோளரை'க் காணவேண்டுமென்று நீர் எண்ணிய காரணத்தால் உம்மைப் பாராட்டுகிறேன் - அதிலும் உண்மையை ஒழிக்காமல் கூறியமைக்கு மெச்சுகிறேன். என்றாலும் அரசியல் பணியிலிரு[ப்]பவர்களுக்குத் தன்னாசையும் தன்னல[ப்] பேணலும் மிகவாக இருத்தல்கூடாது பொதுவின் நாட்டமே அவர்கள் ஊன் உயிர் உடலாக இருத்தல் வேண்டும் இன்று உம் மனம் நாடுகின்ற - கண்கள் காணத் துடிக்கின்ற வெற்றித்தோளர் தன்னைப் பெரிதென. தன்வாழ்வு சிறப்பென தன்னவர்கள் சிறப்பே மகிழ்வெனக் கொண்டிருந்தால் அவர் வீரம் சிறந்திருக்குமா வெற்றி வளர்ந்திருக்குமா? வேற்றவரின் ஆவல்தான் எழுச்சியுற்றிருக்குமா? அல்லும்பகலும் தன் நாடு, நாட்டவர், நாட்டவர் நலம் இவைகளிலேயே அவர் கண்ணும் கருத்து மாயிருப்பவர். அவைகளில் சிறிதும் குறைவின்றி நடந்து கொள்பவர். அதனாலேயே அவர் இன்று காணக்கிடைக்காத காட்சிப் பொருளெனக்கருதப்படுகிறார். எல்லோரும் போர் வீரர், யாவும் போர்ப்படை துரும்பும் போரென்றால் துள்ளியெழும் கோரிநாட்டில். இது அவர் செயலின் விளைவு- ஆற்றலுக்கோர் எடுத்துக்காட்டு திறமைக்கோர் நிலைக்களன். அதனால்தான் அவரை அணுகும் பகைவர் தோல்விபெறுவதாயினும் புதிதாயொரு போர்முறை பெறுகிறோமென்றெண்ணி, பழைதயும் பொருட்படுத்தாது போருக்குச் செல்கின்றனர். போரிலே அவர்களுக்கு அளிக்கப்படுவதோ புதுப்பாடம் அங்கே வளர்வதோ இன்னுமொரு புதுப்போர் முறை. எனவே இனியாகிலும் தன்வரையுள்ள நாட்டத்தை மறந்து, பொதுவின் தலைமையான எண்ணத்தைக் கொள்ளும். இரும் வருகிறேன்

(செல்லுகிறார்)

(அமைச்சர் சென்றபின் அங்குள்ள இரு போர் வீரர்கள் தூதுவருடன் பேசிக்கொண்டிருத்தல்:

அமைச்சர் வந்ததும் வீரர்கள் சென்று தனியே நிற்கின்றனர் அமைச்சருடன் இணைந்து வருவது போலவே படைத்தலைவரும் வந்து சேர்கிறார்.)

அமை: சரி! புறப்படலாம்! வீரர்களே! நாங்கள் செல்கிறோம். துணைத்தளபதியின் மேற்பார்வையில் நீங்களிருங்கள். செய்திகளிருப்பின் சாவடிகளின் வழி தெரியப்படுத்துங்கள்.

(செல்கின்றனர்)

* * *

(தொடரும்)

(மலாயா) தமிழ்ப்பெருமக்களுக்கோர் நற்செய்தி !

அவ்வை புத்தக நிலையம்

142, ஜலான் இட்ரிஸ், கம்பார் - மலாயா.

அன்புடையீர், வணக்கம்,

நீங்கள் அறிவுச் சிற்பிகளாக விளங்க உதவும் அறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், கவிஞர்களின் காவிய ஏடுகளும்,. கலைஞர்களின் நூல்களும், மற்றும் தமிழ், மலாய், ஆங்கில, தினசரி - வார - மாதப் பத்திரிக்கைகளும், இங்கிலீஷ் காமிக்ஸ் & மேக்கசின்களும், பள்ளிக்கூட புத்தகங்களும் (சினிமா) கதை வசன - பாட்டு, புத்தகங்களும், புகைப படங்களும் 1957-ம் ஆண்டு காலண்டர்களும் - டயரிகளும்; கிருஸ்மஸ், தமிழர் திருநாள், பொங்கல், வாழ்த்திதழ்களும், மற்றும் ஸ்டேசனரி சாமான்களும், மலிவான விலையில் எங்களிடம் கிடைக்கும.

குறிப்பு :—தையல் வேலைகளும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

விவரங்கட்கு :

AVVAI BOOK STALL

142, JALAN IDRIS, KAMPAR. MALAYA.

உரிமையாளர் :—கோ. வரதராசன். த. பெட்டி என். 22, டெலிபோன் : என் 22

தமிழ் நாட்டில் தலைசிறந்த

வெண் சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் — ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

நறுமண சீயக்காய்த்தூள்

வெண் சங்கு

ரிஜிஸ்டர் No. 13817

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

பதிவு எண்: M 6296 மன்றம் தொலைபேசி எண்: 55697

அநீதி! அநீதி!! அநீதி!!!

பஞ்சசீலர்களின் ஆட்சியில் அநீதி!

வடநாட்டில் பாகிஸ்தானிலிருந்து கிளம்பிவந்த அகதிகளின் வாழ்வுக்கு டில்லி ஏகாதிபத்திய அரசு, 'நாட்டு நிவாரணம்' என்ற போர்வை போர்த்திக்கொண்டு செலவிட்ட தொகை இதுவரைமட்டும்,

250 கோடி ரூபாய்

தென்னாட்டில், இலங்கையிலிருந்து நாட்டுரிமையற்றவராக வெளியேற்றப்பட்டுத் திரும்பிடும் எண்ணற்ற தமிழர்களின் வாழ்வைச் சீர்படுத்த - அவர்களைப்பற்றி எண்ணிட டில்லிப் பேரரசு மறுக்கிறது.

நமக்கு,

'பஞ்சசீலர்' ஆட்சியில் திட்டம் இல்லை!

'பர்சை'த் தமிழர் ஆட்சியினருக்கு நாட்டம் இல்லை!

கப்பலேறும் தமிழருக்கோர் கோட்டம் இல்லை!

அங்கே,

அகதிகளுக்கு வரவேற்புத் தரப்படுகிறது. திட்டங்கள் உருவாகின்றன. வாழ்வளிக்கப்படுகிறது.

இங்கே,

திட்டங்களில்லை - உழைப்பிற்கு வாய்ப்பில்லை - வாழ்விற்கு வகையில்லை.

வாழ்வு வேண்டி, வகையைத்தேடி, கடல்கடந்து செல்கிறார்கள். அப்படியும் நிம்மதியில்லை. திருப்பித் துரத்தப்படுகிறார்கள்.

நாட்டின் அரசியல் பொருளாதார சமூக உரிமைக்காகப் போராடும்

நாட்டவரே! நல்லோரே!

யாருக்கு உங்கள் வாக்கு?

திராவிட முன்னேற்றக்கழக அபேட்சகர்களுக்கே

வாக்களியுங்கள்.

"மன்றம்" அச்சகத்தில் (26, கைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)
... அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்ப...